பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 07 புதன்கிழமை (19-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:85

## இன்று கறுப்புப்பட்டி போராட்டம்!

யாழ்ப்பாணம்,பெப்.19

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி சமாதான முன்னெடுப்புகளைக் குழப்பும் ஆயுதப்படையினரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு - கிழக்கில் இன்று கறுப்புப் பட்டிப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும் செயற்படும் பொது அமைப்புகள் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள ஊழியர்கள் மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நிதியப் பணிகளை துரிதப்படுத்துவது பற்றி பேச்சு

### கிளிநொச்சியில் நேற்று சர்வதேச பிரதிநிதிகள் ஆராய்வு

கிளிநொச்சி,பெப்.19

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக புனர்வாழ்வு நிதியத்தை விரைவாக செயற்படுத்துவது என்று கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து ஹெலி மூலம் நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி வந்தடைந்த இந்தக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் இரண்டு மணிநேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், "சிரான்" அமைப்பு பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோரும் பங்குபற்றினர்.

கொழும்பில் இருந்து வந்த குழுவில் உலகவங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோன் கோர்னி, ஐ.நா.அபிவிருத்தி திட்ட இலங்கை வதிவிடப் பிரதிநிதி மிக்கல் புருணி, ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் திட்டங்களைத் தயாரிக்கும் குழுத் தலைவரான ரோர்ரோஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமானப் பணிகள் தொடர்பான திட்டங்கள் தயாரிப்பது குறித்து (12ஆம் பக்கம் பார்க்க)

### நாரந்தனை படுகொலைச் சம்பவ சந்தேகநபர்

# தலைமறைவான நெப்போலியன் கொழும்பில் சரணடைய முயற்சி

## உயர்நீதிமன்றம் அதற்கு அனுமதி

கொழும்பு,பெப்ரவரி19

**கடந்த பொதுத்தேர்தல் காலத்தின்போது பிரசாரப் பணிக்காக தீவகத்துக்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பினரைத் தாக்கிப் படுகொலை செய்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் ஈ.பி.டி.பியின் நெப்போலியன், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது**

சந்தேகநபரின் சார்பில் இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்படி உயர் நீதிமன்றம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் பிரதம நீதிவானுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

நெப்போலியன் சார்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதிபதிகளான ஷிராணி பண்டாரநாயக்க, எச்.எஸ். யாப்பா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

நாரந்தனைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதி (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரசபை அருகே பெரும் மனிதப் புதைகுழி!

திருகோணமலை,பெப்.19

திருகோணமலை நகராட்சிமன்ற அலுவலகத்துக்கு பின்புறமாக மனித எலும்புகள் கொண்ட மனிதப் புதைகுழி ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

நகராட்சி மன்றத்துக்கு பின்புறமாக - கடலோரம் - நகரசபை புதிதாக நிறுவிவரும் பூங்காவுக்கான சுற்றுமதில் அமைப்பதற்கு குழி வெட்டிய சமயமே இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதைகுழியில் துடை எலும்புகள் மற்றும் மனித எச்சங்களும் காணப்பட்டன. சில எலும்புகள் முழுத் தோற்றமாக காணப்பட்டன. அவற்றில் உடைகள் ஏதும் இருக்கவில்லை.

இது தொடர்பான தகவல் விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், நகர (12ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி நகரம் விழாக்கோலம்

## தமிழீழ பெரு விளையாட்டு விழா நாளை கோலாகலமாக ஆரம்பம்

கிளிநொச்சி,பெப்.19

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இரண்டாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டுவிழா நாளை வியாழக்கிழமை கிளிநொச்சியில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

நாளைமுதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இந்த விழாவில் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

அணிவகுப்பு, பொதுச்சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல், ஈகச்சுடர் ஏற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், மாவட்டக் கொடிகள் ஏற்றுதல், ஒலிம்பிக் சுடர் ஏற்றுதல், போட்டியாளர் உறுதியுரை, நடுவர்கள் உறுதியுரை, மைதான கலைநிகழ்வுகள் ஆகிய நிகழ்ச்சிகள் அன்று முற்பகல் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளை அடுத்து போட்டிகள் ஆரம்பமாகும். போட்டிகள் தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறும்.

*விழாவின் இறுதிநாளான எதிர்வரும்* 25 ஆம் திகதி இறுதிப்போட்டிகள், பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

விளையாட்டு விழாவையொட்டி கிளிநொச்சி நகர் மஞ்சள், சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது. (ஐ-3)

## சீனன்குடா வேலைநிறுத்தம்:

## குடாநாட்டில் எரிபொருள் விநியோகத்தை பாதிக்காது!

யாழ்ப்பாணம்,பெப்.19

திருகோணமலை சீனன்குடா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் வேலைநிறுத்தம் காரணமாக குடாநாட்டுக்கான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டுக்குத் தேவையான பெற்றோல் தற்சமயம் தரைவழியாக பவுஸர் மூலம் எடுத்துவரப்படுகின்றது; தொடர்ந்து பவுஸர் மூலம் எடுத்துவரப்படும்.

மண்ணெண்ணெய், டீசல், ஆகியன கப்பல் மூலம் திருகோணமலையில் இருந்து எடுத்துவரப்படுவது வழமையாகும். திருமலை வேலைநிறுத்தம் காரணமாக மண்ணெண்ணெயை இன்று முதல் பவுஸர் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது. அத்துடன் டீசலை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

குடாநாட்டில் எரிபொருள்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதால் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை, இப்படி சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-17)

## விகாரையை அகற்றக் கோரி சுன்னாகத்தில் இன்று பேரணி!

கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையை அங்கிருந்து அகற்றக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று சுன்னாகத்தில் நடத்தப்படவுள்ளது.

விகாரை அமைக்கப்படும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு சமீபமாக இருந்து முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி சுன்னாகம் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதியில் உள்ள வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் முடிவடையும்.

பௌத்த விகாரையை அகற்றக் கோரி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முகவரியிட்ட மகஜர்கள் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படும். அங்கு கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

வலி.தெற்கு, வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெறுகின்றது. (ஐ-3-86)

### வரதர் அணிப் பிரமுகர் வீட்டின்மீது கைக்குண்டு வீச்சு

கொழும்பு,பெப்.19

ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) பிரமுகர் ஒருவரின் மட்டக்களப்பு வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது.

மட்டக்களப்பு வைத்தியசாலை சந்தியிலுள்ள போரதீவுப்பற்று பிரதேசசபைத் தலைவரான துரைரத்தினத்தின் வீட்டின் மீதே கைக்குண்டு வீசப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான பிரேரணை தோல்வி

கொழும்பு,பெப்.19

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 42 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. பிரேரணைக்கு எதிராக 126 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஆதரவாக 84 வாக்குகள் கிடைத்தன.

பிரேரணைக்கு எதிராக அரசுடன் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிடிபி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் என்பன வாக்களித்தன. பிரேரணைக்கு ஆதரவாக பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி. என்பன வாக்களித்தன.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடியது. வழமையான அலுவல்களை அடுத்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் (12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டில் பெற்றோல் லீற்றர் 61ரூபா 50சதம்

## ம.எண்ணெய், டீசல் விலைகளில் மாற்றமில்லை

அரியாலை,பெப்.19

இலங்கை பெற்றோலியக்கூட்டுத் தாபனம் பெற்றோலின் விலையை கடந்த வாரம்முதல் லீற்றருக்கு இரண்டு ரூபாவால் அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பை அடுத்து குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் லீற்றர் 59 ரூபா 50சதமாக விற்கப்பட்ட பெற்றோல் தற்போது 61ரூபா 50சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மண்எண்ணெய், டீசல் என்பன்வற்றின் விலைகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

# நல்லை ஆதீனத்தில் திங்களன்று மாபெரும் சர்வமதப் பிரார்த்தனை!

யாழ்ப்பாணம்,பெப்.19

தென்னிலங்கையில் இருந்து வருகை தரும் சர்வமதக் குழுவினரும் இங்குள்ள சர்வமதப் பிரமுகர்களும் இணைந்து நடத்தும் மாபெரும் சர்வமதப் பிரார்த்தனை நல்லை ஆதனத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து வருகைதரவுள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் பௌத்த மதக் குழுவினருடன் இணைந்து இங்குள்ள மதத் தலைவர்கள் இப்பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர்.

நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி நடைபெறவுள்ள இப்பிரார்த்தனையில் சர்வமத பிரமுகர்களுடன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கு முன்னர் அனைவரும் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இருந்து புறப்பட்டு ஊர்வலமாக நல்லை ஆதனத்துக்கு வருவர்.

இதேவேளை -

இது தொடர்பாக செய்தியாளர் மாநாடு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் இன்று பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஐ-10)

# வடக்கு - கிழக்கு மாகாணசபை சட்ட விரோதமாகப் பண வசூல்!

## விடயமறிந்த பொதுமக்கள் கொதிப்பு! மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு!!

கொழும்பு,பெப்.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணி நன்கொடை மற்றும் உறுதி மாற்றங்கள் என்ற பெயரில் பொது மக்களிடமிருந்து சட்ட விரோதமாக முத்திரை வரி அறவிடப்படுகின்றது.

இந்நடவடிக்கையை நிறுத்தும்படி உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'மேதர் அன்ட இராமநாதன்' சட்ட நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஸ்ரோரர் டி.யோகேந்திரா இது தொடர்பாக அரசமைப்பின் 140ஆம் பிரிவின கீழ் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அடுத்த செவ்வாய்க்கிழமை நீதியரசர் கே.சிறிபவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் படவிருக்கிறது.

காணி உடைமை மாற்றங்கள் மற்றும் நீதிமன்ற ஆவணங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணசபை இதுவரை புதிய சட்டங்கள் எதையும் உருவாக்கவில்லை.

எனினும் 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க முத்திரைகள் வரிச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைக்கால ஏற்பாடுகள்) சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணசபை, மேற்படி உறுதி மாற்றம் மற்றும் ஆவணங்களுக்கான முத்திரை வரியைப் பெற்றுவந்தது.

ஆனால், இந்த முத்திரை வரிமுறை 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் ஒழிக்கப்பட்டது. கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான யோசனை தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணசபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் தமக்குத் தமக்கென முத்திரை வரிச்சட்டங்களை சட்டரீதியாக உருவாக்கிக் கொண்டன.

ஆனால், வடக்குக் கிழக்கு மாகாணசபை அத்தகைய சட்ட விதிகள் எதையும் இதுவரை உருவாக்கவில்லை.

அந்த சபை கலைக்கப்பட்டு 13 ஆண்டுகளாகி விட்டன. புதிதாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை. நேரடியாக மாகாண ஆளுநரின் நிர்வாகத்தில் சபை நிர்வாகம் இயங்குகின்றது. தேர்தல்களை நடத்தி புதிதாக சபை தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய அந்த மாகாண சபையால் புதிய சட்டங்களை உருவாக்க முடியாது.

இந்த நிலையில் 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே சட்டரீதியாக ஒழிக்கப்பட்டு விட்ட விதிகளின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாண சபை தொடர்ந்தும் முத்திரை வரி அறவிட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கில் இவ்வாறு தினசரி பல லட்சம் ரூபாவிற்கு முத்திரை வரி அறவிடப்படக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

இந்த நடைமுறையை எதிர்த்தே சட்டத்தரணி யோகேந்திரா வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்.

அவர் தனது மனுவில் தாம் இரண்டு நாள்களில் பதிவு செய்ய முற்பட்ட ஏழு காணிஉறுதி மாற்றங்களுக்கு 21ஆயிரத்து 459ரூபா முத்திரை வரி அறவிடப்பட்டமை தவறு என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.காணிப்பதிவாளர், பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேற்படி வடக்கு - கிழக்கு மாகாணசபை தொடர்ந்து முத்திரை வரி அறவிடுவதற்கு சட்ட அடிப்படை ஏதும் இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்த உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் முத்திரை, காணி மற்றும் கடன் இறைப்பிரிவு சிரேஷ்ட மதிப்பீட்டாளர் ஏ.ஜி.சுமணதாஸ் விடுத்த உத்தரவின் பிரதியையும் தமது மனுவுக்கு சட்ட ஆதாரமாக அவர் சமர்ப்பித்துள்ளார்.

(ஐ)

# மீண்டும் இராணுவத்தினர் ரோந்துப் பணியில் தீவிரம்

யாழ்ப்பாணம்,பெப்.19

நீண்ட காலத்தின் பின்னர் மானிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிப் பிரதான வீதிகளில் இராணுவத்தினர் தமது ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். அதன் பின்னர் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று அரசமைத்த பின்னர் யாழ்.குடாநாட்டில் படிப்படியாக இராணுவத்தினரின் ரோந்துப் பணிகள் குறைந்தன. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் ரோந்துப் பணிகள் கைவிடப்பட்டதாகவே தோன்றியது.

ஆனால், தற்போது குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினர் முன்னரைப் போன்று ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்ததை அவதானிக்க முடிகிறது.

தலைக்கவசம் அணிந்தவாறு காலை வேளைகளில் படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

(ஒ-8)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் ஒத்திவைப்பு

கோப்பாய்,பெப்.19

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-72)

## வீடுகளை விட்டு படையினர் விலகினர்


வடமராட்சி,பெப்.19

கற்கோவளம் பகுதியில் உள்ள வீடுகளில் முகாமிட்டிருந்த படையினர் அங்கிருந்து வெளியேறி கடற்கரையில் புதிதாக முகாமிட்டுள்ளனர்.

இதனையடுத்து படையினர் இருந்த வீடுகள் உரிமையாளர்களிடம் கிராம சேவகர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன.

(ஐ-173)

# உண்மை ஒன்று பாதைகள் பல என வாழ்ந்து காட்டிய வள்ளல்



குரு சேவையை மூச்சாகக்கொண்டு உலகமெங்கும் ஆன்மீக ஆசானாகவும் யோகாசன ஆசிரியராகவும் விளங்கியவரும் இலங்கை தெய்வீக வாழ்க்கைச்சங்க போசகருமான உலக பூரண யோக சமாஜத்தின் தலைவரும் ஆகிய யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் சமாதியடைந்து ஆறாவது மாதம் இன்றாகும்.

என்றும் புன்னகை தவழும் முகம், ஒளிவீசும் கண்கள, சாந்த நிலை, சமநோக்கு, பெருநிலை அன்பால் அனைவரையும் அணைக்கும் கரங்கள், சீடர்களின் கேள்விகளுக்கு சிரித்த முகத்துடன் குறும்பாக பதில் சொல்லும் குணம், தாயையும், நாயையும் சமமாக காணும் உள்ளம். துறவி என்றாலும் உலகம் முழுவதும் ஆன்மீகக்குழந்தைகள், சீடர்களின் குறை தீர்க்க தேடிச்செல்லும் இயல்பு. இவர் குருவின் கட்டளையை சிரமேற்கொண்டு இலங்கையில் வந்து திவ்வியஜீவன சங்கம் மூலம் தறிகெட்டுப்போனவர்களை கரையேற்றியவர் ஆவார். திருகோணமலையில் சிவானந்தாஸ்ரமம், கண்டியில் சச்சிதானந்தா ஆச்சிரமம் மூலம் தவவாழ்க்கையை வாழ்ந்து தன்சீடர்களையும் தவசியாக்கினார். அமெரிக்க மக்களின் அன்பை மீற முடியாமல் பூரண யோக சமாஜம் அமைத்து உலகம் முழுவதும் யோகசமாஜங்களை உற்பத்தி ஆக்கியவர். பெற்றோரால் ராமசாமி என அழைக்கப்பட்ட இவர் தனது குரு இமய ஜோதி சுவாமி சிவானந்தரால் சச்சிதானந்தா என்று அழைக்கப்பட்டதுடன் யோகக்கலையில் சிறந்ததால் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா என குருவால் அறிமுகப்படுத்தப்பட்டார். ஆங்கிலத்தில் பல புத்தகங்களை எழுதி உள்ளார். அவை To Know Your self, The Yoga sutras of Patanjali, The Living Gita, "கைலாசம் கண்டேன்" என்பனவாகும். எல்லா உலகமும் இறை உடல், எல்லா உயிரும் இறை உயிர், நல்லார் அறிந்து நலம்பெற வல்லவன் இறை என வாழ்ந்த இப்பெரியார் தான் பிறந்த மண்ணாகிய பாரத பூமி தமிழ் நாட்டில் இறையுடன் சங்கமமாகி அமெரிக்காவில் அவரால் நிர்ணயிக்கப்பட்ட தாமரைக் கோயிலில் அவரின் அன்புக்குழந்தைகளால் சமாதி வைக்கப்பட்டுள்ளார். அவர் நினைவாக இன்று அவரால் அத்திவாரமிடப்பட்ட யாழ்.திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் திருவடி பூசை, அபிஷேகம், பஜனை முதலியன அன்பர்களால் நடத்தப்படவுள்ளன.

- திருமதி க.சூரசங்காரன்

# இயக்கத்தில் சேர்வோர் விடயத்தில் புலிகள் தெளிவான நிலைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.19

எமது இயக்கத்தில் இணைய வரும் உறுப்பினர்கள் தொடர்பாக நாங்கள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை பிரதிநிதி சு.ப.பவநிதன். புலிகளின் இயக்கத்தில் இணையச் சென்ற நால்வரை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல், புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போது சு.ப.பவநிதன இவ்வாறு தெரிவித்தார்.

இயக்கத்தில் இணையச் சென்ற நால்வரில் இருவர் சிறுவர்கள் மற்றும் இரு இளைஞர்கள், இயக்கத்தில் இணையச் சென்று பின்னர் சுய விருப்பத்தின் பேரில் பெற்றோரிடம் செல்ல விரும்பியவர்கள் ஆவர். இவர்கள் சுழிபுரம், நல்லூர், அராலி மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்.

இந்த நால்வரையும் கையளிக்கும நிகழ்வில் 'யுனிசெப்', யு.என்.எச்.சி.ஆர அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(ஐ-9)

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக சட்டத்தரணி மா.தியாகராசாவும் சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய அதிகாரிகளும், கௌரவ விருந்தினராக புலிகளின் புங்குடுதீவு பொறுப்பாளர் கானகனும் கலந்துகொள்வர். (ஐ)

★ ★ ★

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும்

யாழ்.மாநகராட்சி மன்ற சிரேஷ்ட பொது சுகாதாரப் பரிசோதகர் து.மகாதேவன் பிரதம விருந்தினராகவும், அரியாலை மத்தி வடக்கு கிராம அலுவலர் தி.தருமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஐ)

★ ★ ★

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும், வகுப்பறைக் கட்டடத்திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி ம.குமாரகுலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதனும் கௌரவ விருந்தினராக வரணி வடக்கு கிராம அலுவலர் சி.சச்சிதானந்தனும் கலந்துகொள்வர்.

(ஐ-170)

★ ★ ★

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி சிவில்வலிங்கம் தலைமையில் நடைபெறும்.

டாக்டர் லயன் வி.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

முன்னாள் ஆசிரியையும், பழைய மாணவர் சங்க கனடா கிளையின உறுப்பினருமான திருமதி ஞானப்பூங்கோதை நவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்.(ஐ-ரி)

## தமிழோசையில் கமலஹாசனின் பேட்டி

லண்டன்,பெப்.19

முன்னணி நடிகரும் இயக்குநருமான கமலஹாசன் பி.பி.ஸி.தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டி இன்றும் நாளையும் ஒலிபரப்பாகும் என்று பி.பி.ஸியின் உலக சேவை அறிவித்துள்ளது.

பி.பி.ஸியின் டில்லி செய்தியாளர் எல்.ஆர்.ஜெகதீசன் கமலஹாசனை பேட்டி கண்டுள்ளார்.

பல முக்கிய விடயங்கள் இந்தப் பேட்டியில் இடம்பெற்றுள்ளன என்று உலக சேவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-3)

## சாவகச்சேரியில் சங்கக்கிளைகள் இன்று திறப்பு

அரியாலை,பெப்.19

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகள் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

சங்கத்தின் பொது முகாமையாளர் சி.தேவகுமார் இதனைத் தெரிவித்தார்.

சங்கத்தானை மீனாட்சி அம்மன் வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் சங்கத்தின் 21 ஆம் இலக்கக் கிளையும் -

சாவகச்சேரி வடக்கில் முன்பு செயற்பட்ட கிளைக் கட்டடத்தில் 16 ஆம் இலக்கக் கிளையும் திறந்து வைக்கப்படும்.

இதேவேளை -

மேற்படி சங்கத்தின் இரண்டாம் இலக்கக் கிளை சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலைய வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

## மின்சாரசபையின் பொதுமுகாமையாளர் குடாநாட்டில் ஆய்வு

யாழ்ப்பாணம்,பெப்.19

இலங்கை மின்சாரசபை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தனியார் மயமாக்கப்படவுள்ளது. இது தொடர்பான முன்னோடி நடவடிக்கைகள் தற்பொழுது- சபையினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சபையின் செயற்பாடுகள் யாவும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நான்கு மேலதிக பொது முகாமையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்.மாவட்டத்தின் செயற்பாடுகள் மட்டும் பொதுமுகாமையாளரின் நேரடிக் கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து குடாநாட்டின் மின்சாரசபையின் நடவடிக்கைகள் குறித்து ஆராய பொதுமுகாமையாளர் டி.சி.விஜயரட்ண இம்மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடிச் சென்றுள்ளார் என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-10)

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1F, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# பொலக் மீது தென்னாபிரிக்க பத்திரிகைகள் கடும் பாய்ச்சல்

ஜொகன்னர்ஸ்பேர்க்,பெப்.19

நியூஸிலாந்து அணியுடனான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி படு தோல்வி அடைந்ததை அடுத்து தென்னாபிரிக்கப் பத்திரிகைகள் பொலக் மீது கடுமையான விமர்சனங்களைத் தெரிவித்துள்ளன.



சிறந்த வேகப் பந்து வீச்சாளரும் ஒரு நாள் ஆட்டங்களில் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரேயொரு தென்னாபிரிக்க வீரருமான அலன் டொனால்ட்டும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.

பொலக்கின் தலைமை பற்றியும் பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

"அளவு குறைவான பந்துகளை வீசியும் தவறான திசையில் பந்து வீசியும் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் ஆட்டத்தைத் தாரைவார்த்து விட்டனர்" - என்று 'யசின்டே' என்ற பத்திரிகை குற்றஞ் (11ஆம் பக்கம் பார்க்க)

# சிம்பாப்வே போட்டிகளிலிருந்து நடுவர்கள் இருவர் விலகினர்!

சிம்பாப்வேயில் உலகக் கிண்ணப் போட்டிகளில் பணியாற்றுவதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் நடுவர்களான பீட்டர் வில்லி, நீல் மல்லேந்தர் ஆகியோர் வாபஸ் பெற்றுள்ளனர்.




இதனால் சிம்பாப்வேயில் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவது தொடர்பாக மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி சிம்பாப்வேயில் நடைபெறவிருந்த போட்டியிலிருந்து இங்கிலாந்து அணி வாபஸ் பெற்றது.

இந்நிலையில் எதிர்வரும் 24, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிகளில் நடுவர்களாகப் பணியாற்றுவதற்கு இங்கிலாந்து நடுவர் பீட்டர் வில்லியும், நீல் மல்லேந்தரும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் சிம்பாப்வேயுடன ஆஸ்திரேலியா, நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன.

24 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய - சிம்பாப்வே போட்டியில மற்றொரு இங்கிலாந்து நடுவரான டேவிட் ஒச்சார்டும், பீட்டர் வில்லியும் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். மல்லேந்தர் மூன்றாவது நடுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

28 ஆம் திகதி நடைபெறவுள்ள நெதர்லாந்து - சிம்பாப்வே போட்டிக்கு பீட்டர் வில்லி மூன்றாவது நடுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

"ஆனால், இங்கிலாந்து கிரிக்கெட் சபை சிம்பாப்வேவுக்கு தனது அணியை அனுப்பாவிட்டால் சிம்பாப்வே போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுவிடுவோம் என வில்லி, மல்லேந்தர் ஆகியோர் ஏற்கனவே ஐ.சி.சியிடம் அறிவித்திருந்தனர்.

"இங்கிலாந்து போட்டியிலிருந்து வாபஸ் பெற்ற பின் இவர்கள் தமது தீர்மானத்தை மீண்டும் உறுதிப்படுத்தினர்." - இவ்வாறு ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் நேற்றுக் கூறினார்.

இதையடுத்து ஆஸ்திரேலிய - சிம் (10ஆம் பக்கம் பார்க்க)

# வென்றேயாகவேண்டும் இந்தியா

இந்தியாவின் கிரிக்கெட் நாயகர்கள் மாட்டிக்கொண்டுள்ளார்கள். ரசிகர்களை ஏய்க்க முடியாது என்பதை அவர்கள் இப்போது புரிந்துகொண்டிருப்பார்கள். தனிநபர் சாதனைகளும் விளம்பர நடிப்புகளும் மட்டும் இனி திருப்தி தரப்போவதில்லை. அவர்கள் எதையாவது சாதித்தே ஆகவேண்டும். அதற்கான இறுதி சந்தர்ப்பம் இன்றே.

சிம்பாப்வேயுடனான ஆட்டம் இன்று இந்தியர்களுக்கு பலப்பரீட்சை. அவர்கள் வென்றே ஆகவேண்டும். இல்லையேல் கொன்றே போடுவார்கள் ரசிகர்கள். 'சுப்பர் சிக்ஸ'க்குள் போக வேண்டுமாயின் இன்றைய வெற்றி மிக அவசியமானது. இதிலும் தோற்றால் அடுத்த சுற்று குறித்து அவர்கள் நினைத்தும் பார்க்கத் தேவையில்லை. இனிவரும் ஆட்டங்களில் நமீபியா மட்டுமே இந்தியர்களுக்கு இலகுவாக இருக்கப்போகும் அணி. ஆனால், இப்போது இருக் (11ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்த சுற்றுக்குச் செல்லுமா?

## அச்சம் தெரிவிக்கிறார் முன்னாள் பயிற்றுவிப்பாளர்

தென்னாபிரிக்க அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறாது என்று தான் அஞ்சுவதாக முன்னாள் பயிற்றுவிப்பாளர் பொப் வூல்மர் தெரிவித்துள்ளார். பொலக் தலைமையிலான அணி கடும எதிர்பார்ப்புக்களால் ஆபத்தான கடும அழுத்தத்துக்குள்ளாகி இருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

"இப்போதைய நிலையில் என்னுடைய உள்ளுணர்வு நல்லதைக் கூறவில்லை. தென்னாபிரிக்கர்கள் பின் வாங்கிவிடுவர் என்றே நான் எதிர்பார்க்கின்றேன். அணி உயர் இறுக்கத்தில் இருக்கின்றது. நீங்கள் நன்றாகப் பாருங்கள்; அவர்களின் உடல் மொழியை (Body Language), அவர்களின் முகங்களை, அவர்களின் ஆட்டத்தை" - (10ஆம் பக்கம் பார்க்க)

# சிறப்பாட்டக்காரர் தரவரிசை குளூஸ்னர் முன்னணியில்!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சிறப்பாட்டக்காரர் தெரிவில் தென்னாபிரிக்க வீரர் லான்ஸ் குளூஸ்னர் முன்னணியில் திகழ்கின்றார்.

கடந்த உலகக் கிண்ணத் தொடரிலும் இவர் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாட்டக்காரர் விருதுக்குரியோருக்கான தெரிவுகளின் அடிப்படையில் தொடரின் விருதுக்குரியவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

ஐ.சி.சி.பொது முகாமையாளர் டேவ ரிச்சட்ஸன் இது தொடர்பாகக் கூறுகையில்,

"ஒவ்வொரு போட்டியிலும் 3 சிறந்த வீரர்களைத் தெரிவு செய்யுமாறு போட்டி மத்தியஸ்தர்கள் கோரப்பட்டுள்ளனர். போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதைப் (10ஆம் பக்கம் பார்க்க)

# எமக்குத் துணையிருங்கள்! டெண்டுல்கரின் உருக்கம் !!

ஹராரே,பெப்.19

"எங்களது ஆட்டத்தால் நீங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளீர்கள் என்பது



எனக்குப் புரிகின்றது. ஆனால், நாங்கள் இனிமேல் வெற்றிகளைப் பெறுவதற்கு எங்களுக்குத் துணையிருங்கள்."

- இவ்வாறு இந்திய ரசிகர்களிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார் இந்திய நட்சத்திர ஆட்டக்காரரும் உலகின் சிறந்த துடுப்பாளருமான சச்சின் டெண்டுல்கர்.

ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் இந்தியா மிகமோசமான முறையில் தோல்வி அடைந்ததால் ஆத்திரமடைந்த இந்திய ரசிகர்கள் தமது கிரிக்கெட் அணி மீது கடும் கோபம் கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் கங்குலியின் படத்தை எரித்தல், கைவ்வின் வீட்டுக்கு கறுப்பு 'பெயின்ட்' அடித்தல் போன்ற பல்வேறு செயல் (10ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day




நேற்றைய ஆட்டத்தில் சிக்ஸரை விளாசும் பவல்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# இரண்டாவது சோதனையிலும் வோர்ன் தோல்வி

ஆஸ்திரேலிய சுழல்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் இரண்டாவது ஊக்க மருந்துப் பரிசோதனையிலும் தோல்வியடைந்துள்ளார்.

ஆஸ்திரேலிய விளையாட்டு ஊக்க மருந்து தடுப்பு நிலையம் இச்சோத



னையை நடத்தியது. இரண்டாவது பரிசோதனைப் பெறுபெறும் வோர்ன் ஊக்கமருந்து பாவித்துள்ளதாகவே தெரிவிக்கிறது. இது குறித்து ஷேன் வோர்னுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸி.கிரிக்கெட் சபையின் விசாரணையை எதிர்கொள்ளவுள்ள ஷேன் வோர்ன் தற்போது தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசனை நடத்தி வருகிறார்.

ஷேன்வோர்ன் உட்கொண்ட 'டியுரேட்டிக்' வகை மருந்து, தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டமையை மறைக்கும் அளவுக்கு செறிவானதல்ல என சட்டத்தரணிகள் வாதிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விசாரணையில் வோர்ன் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் இரு வருடங்களுக்கு தடையை எதிர்நோக்க நேரிடும். (ம)

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

# அனுருத்தவுக்கான பாதுகாப்புப் படையணியினரை சிவில் உடையில் செல்லுமாறு நானே உத்தரவிட்டேன்!

## உடதலவின்ன வழக்கில் இராணுவத் தளபதி சாட்சியம்

கொழும்பு,பெப்.19

இராணுவத்தினர் தங்களது பாதுகாப்பை உறுதிசெய்யும்பொருட்டு சிவில் உடையில் கடமையாற்றுவது தவறில்லை. அதனால்தான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புப் படையணியினரை சிவில் உடையில் செல்ல உத்தரவிட்டேன்.

- இவ்வாறு உடதலவின்ன படுகொலைகள் வழக்கில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அரச தரப்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ சாட்சியை - இராணுவத் தளபதியை - குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* இராணுவத் தளபதியாக எப்போது பதவியேற்றீர்கள்?

*பதில்:-* 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25ஆம் திகதி.

*கேள்வி:-* விசேட பிரமுகர் பாதுகாப்புக் குறித்து இராணுவத்தில எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது?

*பதில்:-* விசேட பிரமுகர் செல்லும் இடங்கள், அவர் செல்லும் பாதை சகலவற்றிற்கும் பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு விசேட பயிற்சிபெற்றவர்களே நியமிக்கப்படுவர்.

*கேள்வி:-* கடந்த தேர்தல் காலத்தில் நீங்கள் இராணுவத் தளபதியாக எவ்வளவு காலம் சேவையாற்றினீர்கள்?

*பதில்:-* ஒரு வருடம் 4மாதங்கள்.

*கேள்வி:-* அந்தக் காலப்பகுதியில் இந்த வழக்கின் முதலாவது எதிரி பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தாரா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* அப்படியானால், பாதுகாப்பு அமைச்சிலிருந்து வந்த இந்தக் கடிதத்தின் பிரதியை நீங்கள் பார்த்திருப்பீர்கள் அல்லவா?

*பதில்:-* ஆம்.

(கடிதத்தின் பிரதியை சொலிசிட்டர் ஜெனரல் சாட்சியிடம் காட்டினார்.)

*கேள்வி:-* இந்தக் கடிதம் எது குறித்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

*பதில்-* பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டவரின் நியமனக் கடிதம்.

*கேள்வி:-* இதில் யார் கையொப்பம் இட்டிருக்கிறார் என்று தெரியுமா?

*பதில்:-* அந்தக் காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்தவர்.

*கேள்வி:-* அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக யார் பதவி வகித்தார்?

*பதில்:-* சந்திரானந்த டி சில்வா.

*கேள்வி:-* 2001ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதிக்குமுன் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும் என உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதா?

*பதில்:-* பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு அச்சுறுத்தல் அண்மைக்காலத்தில் ஏற்பட்டதல்ல. 1994ஆம் ஆண்டுமுதல் இருந்தே அவருக்கு அச்சுறுத்தல் இருந்து வந்திருக்கிறது. அவருக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது. (இத்தருணத்தில் சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஒழுங்குப்பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

தான் கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதிலளிக்கவேண்டுமெனவும் அநாவசியமான விடயங்களைச் சொல்ல வேண்டாமென சாட்சிக்கு உத்தரவிடுமாறும் பாலித பெர்னாண்டோ நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

இராணுவச் சீருடை சம்பந்தமாக சாட்சியின் நிலைப்பாடு என்ன என சொலிசிட்டர் ஜெனரல் சாட்சியிடம் கேட்டபொழுது - "இராணுவத்தில சிவில் உடையில் கடமையாற்றுவதற்கு - தனிப்பட்ட பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு - சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

"எனவே, சிவில் உடையில் இராணுவத்தினர் கடமையாற்றுவதில் தவறில்லை என நினைக்கின்றேன். சிவில் உடையில் கடமையாற்றவும் உத்தரவு பிறப்பித்தேன்" - என்றார் இராணுவத்தளபதி.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பாதுகாப்பு விடயத்தில் தனிப்பட்ட முறையில் எதுவித உத்தரவையும் தான் பிறப்பிக்கவில்லை என்றும் அவர் நீதிமன்றத்தில் கூறினார்.

எதிர்த்தரப்பு சட்டத்தரணி ஒபயசேகர சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் பிரதிப் பாதுகாப்பு அமைசசருக்கு இருந்த காரணத்தினால்தான் அவரது பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டுமென தான் கருதியதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

டிசெம்பர் மாதம் 6ஆம் திகதியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குப் பாதுகாப்பு வசதியளிக்கப்பட்டதெனவும், பாதுகாப்புப் படையணியை மீண்டும் அனுப்பும் பொழுது பாதுகாப்பு விடயத்தில் மட்டும் செயற்படவேண்டுமெனவும், ஏனைய விவகாரங்களில் தலையிடக் கூடாதெனவும் படையணிக்கு தான் உத்தரவிட்டிருந்ததாகவும் இராணுவத் தளபதி பலகல்ல தெரிவித்தார். (ஒ)

## உயர் பெறுபேறு பெற்றுக்கொள்ள அதிபர், ஆசிரியர் கூட்டு முயற்சி தேவை

### விளையாட்டு நிகழ்வில் சாவகச்சேரி நீதிவான் தெரிவிப்பு

குருநகர்,பெப்.19

அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் கூட்டு முயற்சி இருப்பின் உயர் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியநிலை உருவாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் க.அரியநாயகம்.

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் அருட்செல்வி ஜி.செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் கல்வி முன்னேற்றம், பரீட்சைப் பெறுபேறுகளின் உயர்வு என்பன பிரதானமானவை. குறிப்பாக கிராம, நகர்ப்புற பாடசாலைகள் தோறும் இன்று மிகமுக்கியத்துவம் கொடுத்து பேசப்படும் விடயம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறாகும்.

எனவே, அதிக முக்கியத்துவம் கொடுத்து பேசப்படும் இந்தப்பெறுபேறுகளை உயர்ந்த நிலையில் அதாவது, சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டுமானால் பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் - என்றார்.

வித்தியாலய அதிபர் அருட் செல்வி ஜி. செல்வராணி தனது உரையில்:-

பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு மிக அவசியம். குறிப்பாக விளையாட்டுக் கல்வியில் மாணவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

விளையாட்டுக்களில் பங்குகொள்வதன்மூலம் பழிவாங்கும் மனப்பாங்குகள், தீய எண்ணங்கள் மாணவர்களிடம் இருந்து விலகிச் சென்றுவிடும்.

பணம் இன்று இருக்கும் நாளை அது போய்விடும். ஆனால், நாம் கற்கும் கல்வியும், ஒழுக்கமும்தான் எமக்கு வாழ்வில் உயர்வைப் பெற்றுத்தரக் கூடியவை - என்றார்.

இந்நிகழ்வில் கார்மேல் மடத் தலைவி அருட்செல்வி எம்.மாறி லூயிஸ் சிறப்பு விருந்தினராகவும், புனித யுவானியார் ஆலய பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எம்.ஜி.நேசநாயகம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (எ-51)

## 'முண்டா' காஸ் விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பம்!

கொழும்பு,பெப்.19

'முண்டா' காஸ் அடுத்த ஓரிரு வாரங்களில் சந்தைக்கு வந்துவிடும் என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார். ஏனைய இரு காஸ்களையும் விட சுமார் 150 ரூபா குறைவாகவே 'முண்டா' காஸ் விற்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

'முண்டா' காஸை இலங்கைக்கு வரவழைப்பதில் பல தடங்கல்கள் ஏற்பட்டன எனவும் - அவற்றுக்குக் காரணமானவர்களை அடுத்தவாரம அம்பலப்படுத்துவேன் எனவும் - அமைச்சர் கூறினார்.

நேற்றுமுன்தினம் காலை தனது அமைச்சில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கருணாநாயக்க இவற்றைத் தெரிவித்தார்.

ஷெல் காஸ் நிறுவனம் நினைத்தவாறு விலையை அதிகரித்துச் செல்கிறது. அந்த நிறுவனம் காஸ் சிலிண்டர்களுக்குப் பெற்றுக்கொண்ட வைப்புப் பணத்தைக் கருத்திற்கொண்டே காஸ் விலையை 45 ரூபாவால் குறைக்குமாறு உத்தரவிடப்பட்டது எனவும் அமைச்சர் சொன்னார். (ஒ)


**வர்த்தக நிறுவனத்துக்கு கடை/கட்டடம் வாடகைக்குத் தேவை**

**யாழ்ப்பாண நகரில் வர்த்தக நடவடிக்கையை ஆரம்பிக்கும் நோக்கில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு 3,500 முதல் 4,000 சதுர அடி விஸ்தீரணமுள்ள கடை அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை.**

**யாழ். நகருக்கு அண்மித்த பகுதிகளான ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி, காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி ஆகிய பகுதிகள் பெரிதும் விரும்பத்தக்கவை.**

இன்று தொடர்புகொள்ளும்
தொலைபேசி இலக்கங்கள்
★ 222 2390 ★ 0777 314220 (14663)



**45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



**திருமதி முத்துப்பிள்ளை பாலசிங்கம்**

அன்னையின் மடியில் 05.02.1934 — ஆண்டவன் மடியில் 06.01.2003

அன்பின் இலக்கணமாய் பண்பின் சிகரமாய்வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.02.2003 - மாசி 07) புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*பெரியம்பன்பதி,*
*அம்பன் மேற்கு அம்பன்,*
*குடத்தனை.* (14664)

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்


### பரிசளிப்பு விழா

வடமராட்சி,பெப்.19

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்.அரச அதிபர் சி.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-173)

### வீடற்ற குடும்பங்களை குடியமர்த்தத் திட்டம்

இருப்பிடம் இல்லாத குருநகரைச் சேர்ந்த குடும்பங்களை யாழ்ப்பாணத்தின கரையோரப் பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குருநகர் பங்குத் தந்தை வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் தெரிவித்தார்.

இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் குடியேற்றத்திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதற்கு உலக வங்கியின் உதவி பெற்றுக்கொள்ளப்படும். இப் பகுதியில் குடியமர விரும்பும் வீடில்லாத குருநகர் மக்கள் தமது விவரங்களை குருநகர் புனித யாகப்பர் ஆலய வளவில் அமைந்துள்ள அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஒ-51)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம் 22 - 12 - 1946



மறைவு 20 - 01 - 2003

**திருமதி நவரட்ணம் பரமேஸ்வரி**

அன்பாய்ப் பேசி ஆதரவாய் அரவணைத்த அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து உடனே வந்து எமக்கு அனைத்து உதவிகளையும் செய்தும் இறுதிச்சடங்கில் கலந்தும் எமது துக்கத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிந்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (19.02.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*பாடசாலை வளவு,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (14637)

# அரசமரம், முகாம் உள்ள இடங்களில் புத்தர்சிலை முளைத்தெழுவது விந்தை!

## பொது அமைப்புகளின் பிரசுரத்தில் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.19

அரசமரங்கள் மற்றும் முகாம்கள் உள்ள இடங்களில் புத்தர் சிலைகள் புதிதுபுதிதாக முளைத்தெழுவது விந்தையாகவுள்ளது.

கந்தரோடையில் புதைபொருள் ஆராய்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் விகாரை கட்டப்பட்டதைக் கண்டித்து வலி. தெற்கு, வலி.வடக்கு பொது அமைப்புகள் ஒன்றியங்கள் இணைந்து வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்ட விவரம் வருமாறு:-

கந்தரோடை தமிழ் மண்ணில் புத்தர் சிலையா! புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ன கேலிக்கூத்தா?

எமது தாயக பூமியான கந்தரோடையில் இலங்கை இராணுவத்தினரால் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாதாரண சிலை அமைப்பு விகாரை ஒன்று அமைப்பதில்தான் போய்முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அரசமரம் உள்ள இடங்களிலும் இராணுவ முகாம்கள் அமையும் இடங்களிலும், புத்தர்சிலைகள் புதிதுபுதிதாக முளைத்தெழுவது விந்தையாகவுள்ளது.

அரசு - புலிகள் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இத்தகைய அநீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது கண்டிக்கப்படவேண்டியதும் எதிர்க்கப்படவேண்டியதும் ஆகும். எதிர்ப்பினைக்காட்ட மக்கள் ஒன்றுபடவேண்டும் - என்றுள்ளது. (ஒ-86)

# திருமலையில் எரிபொருள் தட்டுப்பாடு; பெற்றோலிய ஊழியரின் போராட்டம் நீடிப்பு!

திருகோணமலை,பெப்.19

திருகோணமலையில் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் கடைகள் எங்கும் எரிபொருள் இல்லை என்றே கைவிரிக்கின்றனர்.

திருகோணமலை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை விநியோகிக்காததன் காரணமாகவே இந்தத் தட்டுப்பாடு நிலவுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை சீனன் குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்கள் இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதை எதிர்த்து பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கடந்த 15ஆம் திகதிமுதல் எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருக்கின்றது.

வடபகுதிக்கு எரிபொருள் ஏற்றிவரச்சென்ற லொறிகளும் எரிபொருள் நிரப்பப்படாமலேயே திருப்பிவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

தாங்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு எதிரானது அல்ல. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எதிரானதே என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தெரிவித்தனர்.

300இற்கும் அதிகமானோர் இங்கு கடமை புரிகின்றனர். இவர்கள் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் நிர்வாகத்தின்கீழ் கடந்த 15ஆம் திகதிமுதல் கடமையாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தங்களின் நிலைப்பாடு என்ன என்பது தெரியாததால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெற்றோலியக்கூட்டுத்தாபன தலைமைக் காரியாலய உயர் அதிகாரிகள் சீனன்குடா வந்து ஊழியர்களை உரிய முறையில் இந்தியன் ஒயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கவேண்டுமென ஊழியர்கள் கோருகின்றனர். (ஒ)

# சுகவாழ்வு நிலையம் ஏற்பாட்டில் சமாதான விழிப்புணர்வுத் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.மாவட்ட பாடசாலைச் சிறுவர்களை ஒன்றிணைத்து சமாதான விழிப்புணர்வுத் திட்டமொன்றை யாழ்ப்பாணத்திலுள்ள சுகவாழ்வு நிலையம் முன்னெடுக்கவுள்ளது.

சுமார் ஒரு வருடகாலத்துக்கு மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சமாதான மாநாடு ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் துணை இழந்தவர்களுக்குமான உள சமூக மேம்பாட்டு நிறுவனமான சுகவாழ்வு நிலையம் மேற்கொள்ளவுள்ள இந்தத் திட்டத்துக்கு 'யுனிசெவ்' அனுசரணை வழங்கியுள்ளது.

'வன்முறையற்ற தொடர்பாடல்மூலம் பாடசாலை சிறுவர்களிடையே திறனைக் கட்டியெழுப்புதல்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்திட்ட நடைமுறைக்காக முதற்கட்டமாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த இருபது பாடசாலைகளிலிருந்து மாணவத் தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. (ஒ-9)

# பொலீஸ் திணைக்களத்திலேயே அதிக ஊழல் மற்றும் ஒழுங்கீனம்!

## அமைச்சர் அமரதுங்க கவலை

கொழும்பு,பெப்.19

பொலீஸ் திணைக்களத்தில் அதிகளவு ஊழல் மற்றும் ஒழுங்கீனங்கள் காணப்படுவதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கவலை தெரிவித்தார்.

சில சிரேஷ்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் நேரடியாக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சில உத்தியோகஸ்தர்கள் போதைவஸ்து கடத்தல்காரருடன் நட்புக் கொண்டிருக்கிறார்கள். சிலர் குற்றச்செயல்கள் குறித்து தகுந்த கவனம் செலுத்துவதில்லை என்றும் - முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார் அவர்.

பொலீஸ் பயிற்சி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் காலை பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அவர், மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பது அவசியம் என்றும் - குறிப்பிட்டார்.(ஒ-7)

### நாளை

மாசி 08
வியாழக்கிழமை
(20.02.2003)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 10.26 வரை.
நட்சத்திரம்: அத்தம்
மாலை 6.23 வரை.
சங்கடஹர சதுர்த்தி
விரதம்
சுபநேரம் : 8.02 - 9.32
ராகுகாலம் : 2.02 - 3.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பிறரை மனம் நிறையப் பாராட்டுவது மிக மலிவான உதவியாகும்.

# 13 மீனவர்களுடன் இரு வள்ளங்கள் சோமாலியா கடலில் வைத்து கடத்தல்!

## நீர்கொழும்பிலும் மாத்தறையிலுமிருந்து சென்றவை

கொழும்பு,பெப்.19

இலங்கையிலிருந்து 13 மீனவர்களுடன் சென்ற இரண்டு மீன்பிடி வள்ளங்கள் சோமாலியா கடல் பகுதியில் வைத்து கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்விரு படகுகளிலிருந்து இறுதியாகக் கிடைத்த வானொலிச் செய்திகள் மூலம் அவை கடத்தப்பட்ட தகவல் எட்டியிருக்கிறது.

கடந்த ஜனவரி 15 ஆம் திகதி நீர்கொழும்பிலிருந்து ஆறு மீனவர்களுடன் புறப்பட்ட ஒருவள்ளமும் மாத்தறையிலிருந்து ஏழு மீனவர்களுடன் புறப்பட்ட மற்றொரு வள்ளமுமே கடத்தப்பட்டிருக்கின்றன.

இரு வள்ளங்களும் புறப்பட்ட தினத்திலிருந்து கடந்த 11ஆம் திகதிவரை தினமும் அவற்றின் உரிமையாளர்களுடன் வானொலித் தொடர்புகளை வைத்திருந்தன. ஆயினும், 12 ஆம் திகதியின் பின்னர் எந்த ஒரு தொடர்பும் ஏற்படுத்தப்படவில்லை.

ஆயுதம் தரித்த கொள்ளைக்கோஷ்டி ஒன்று வள்ளங்களைக் கைப்பற்றியதாக அவ்விரு வள்ளங்களில் இருந்தோர் அப்பகுதியிலிருந்த ஏனைய இலங்கை வள்ளங்களிடம் அறிவித்திருக்கின்றனர். அந்த வள்ளங்களில் இருந்தோரே வானொலித் தொடர்புக் கருவிகள்மூலம் கடத்தல் பற்றிய செய்தியை கரைக்குத் தெரிவித்திருக்கின்றனர். இதனையடுத்து இச்சம்பவம் குறித்து நீர்கொழும்பு பொலீஸில் முறையிடப்பட்டது.

# தமிழ்த்திறன் விருத்திக்கு புதிய போட்டிகள் அறிமுகம்

வலிகாமம் தெற்கு,பெப்.19

இவ்வருடம் நடைபெற உள்ள அகில இலங்கைத் தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகளின்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கூத்து நிகழ்ச்சிகளுடன் திருக்குறள் போட்டிகள், இசைக்கருவிகள் தொடர்பான போட்டிகள் என்பனவும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல தமிழ்மொழிமூலப் பாடசாலைகளிலும் தரம்4 தொடக்கம் தரம்13 வரையான ஐந்து பிரிவுகளில் திருக்குறள் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவிப்பது, எழுத்தாக்கம், திருக்குறளுக்குப் பொருள் கூறுதல், விநாடிவினா போன்றவற்றை உள்ளடக்கியதாகத் திருக்குறள் போட்டிகள் அமைந்திருக்கும்.

திருக்குறள் போட்டியை நடத்துவதற்கு வசதியாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகள் அனைத்துக்கும் திருக்குறள் நூல்கள் அனுப்பிவைக்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும், வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் தொடர்பான பயிற்சியையும் இலாவகத்தன்மையையும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில் இசைக்கருவிகளின் திறன்விருத்திப் போட்டிகளும் இவ்வருடம்முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக நடத்திமுடிக்கப்படவுள்ளன.

மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக வலய மட்டப் போட்டிகளும் - மாவட்ட மாகாண மட்டத்திலான எழுத்துப் போட்டிகள் மே மாதம் 28ஆம் திகதிக்கு முன்பதாகவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தமிழ்த்தினப் போட்டி மே மாதம் 24, 25ஆம் திகதிகளிலும், மாகாணத் தமிழ்த்தினப் போட்டிகள் ஜூன் 15ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழி விழா ஜூன் 16 ஆம் திகதி நடைபெறும்.(ஒ-152)

# வலிகாமம் கல்வி வலயத்தில் 2 பாடசாலைகள் மீள ஆரம்பம்!

வலிகாமம் தெற்கு,பெப்.19

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள இரண்டு பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுமே மீண்டும் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளாகும். (ஒ-152)

உதயன்

# தமிழ் தலைவர்களுக்கு இது சமர்ப்பணம்

★ தமிழ் இனத்தின் நன்மை கருதி, தமிழ்க் கூட்டமைப்பில் இருந்து அரசியல் வியாபாரிகளை அகற்றியே ஆகவேண்டும்.

★ நாடாளுமன்றம் வயோதிபர் மடம் அல்ல.

★ நாடற்றவர் பிரச்சினை உருவாகச் சில மலையகத் தலைவர்களின் பொறுப்பற்ற செயற்பாடே காரணம். அதுபோன்று கூட்டமைப்பினர் இப்போது நடக்கக்கூடாது.

★ நாடாளுமன்றம் செல்வதற்கான பஸ் அல்ல தமிழ்க் கூட்டமைப்பு.

★ தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வெறும் 'ஸ்டண்ட்' அடிக்கின்றனர்.

"தமிழ்த் தேசிய இனமும் இன்றைய அரசியல் பரிமாணங்களும" என்ற தலைப்பில் கொழும்பில் கடந்த ஞாயிறன்று நடந்த கருத்தரங்கில் பல தமிழ் அரசியல் பிரமுகர்கள் உரையாற்றினர். அவர்கள் ஆற்றிய உரைகளில் தெரிவித்த கருத்துக்களே மேலே குறிப்பிடப்பட்டவை.

கடந்த பதினாறு, பதினேழு மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பின் இன்றைய நிலையை ஓரளவு எடுத்துக் காட்டுவதற்கு இவை போதுமானவை.

தமிழ்க் காங்கிரஸ் - தமிழரசுக் கட்சி என்று பிளவுபட்டிருந்த ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமை, தமிழ் ஈழக் கோரிக்கையுடன் ஒன்றிணைந்து மக்களைச் சந்தித்தபோது - 1977இல் - அதற்கு பெருவெற்றியை ஈட்டிக் கொடுத்தார்கள் தமிழர்கள்.

அந்தத் தமிழ் ஈழத் தேசத்துக்காகத் தமது உயிரையும் உடலையும் ஆகுதியாக்கிவரும் விடுதலைப் புலிகளை ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகத் தமிழ்க் கூட்டமைப்பினர் பறைசாற்றிய போது மீண்டும் அதே பாரிய வெற்றியை - 2001 டிசெம்பரில் - அவர்களுக்கு அள்ளிக்கொடுத்தனர் தமிழர்.

1977இல் மக்களிடம் தாங்கள் பெற்று வந்த ஆணையை, தூய வழியில் தொடர்ந்து நிறைவேற்றத் தவறியதால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலையும், இனத்தின் தலைமைத்துவத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியிடமிருந்து இளைஞர் சக்தி கையேற்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டன.

இந்த அனுபவத்திலிருந்து படித்துக் கொண்ட பாடத்தை தமிழர்களின் மிதவாத சக்திகள் நல்லதோர் வழிகாட்டுதலாகக் கொண்டு எதிர்காலத்தில் திறம்படச் செயற்படும் என்றுதான் தமிழ் மக்கள் ஆரம்பத்தில் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த எதிர்பார்ப்புப் பொய்த்துவிடும் என்றோ, அல்லது 1977 தேர்தலுக்குப் பின் ஏற்பட்ட கதியே 2001 தேர்தலுக்குப் பின்னும் இச்சக்திகளுக்கு ஏற்படும் என்றோ கருதும் நிலைமை உருவாகியிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

1977இல் ஈழத்தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட அவர்களின் அரசியல் அபிலாஷை - கோரிக்கை - எதிர்பார்ப்பு - நாடாளுமன்றக் கதிரைகளைச் சிலர் அலங்கரிப்பதற்கான வெற்றுக் கோஷமாகப் பரிகசிக்கப்பட்டபோதே, அந்த அபிலாஷைகளை வென்று தரும் சாதனை நாயகர்களாக - காரிய வீரர்களாக - இளைஞர்கள் திரண்டெழுந்தனர்.

அந்த எழுச்சிக்கு உந்து சக்தியாகக் கூட நின்று தாக்குப் பிடிக்கமுடியாத மிதவாத அரசியல்வாதிகள், சுமார் கால்நூற்றாண்டுகாலம் கழித்து, அம்முயற்சிக்கு உறுதுணையாகச் செயற்பட முன்வந்தபோது ஈழத்தமிழர்கள் 'பொங்கி' எழுந்து அவர்களை வரவேற்றனர்.

இப்போது அவர்களில் சிலர் மீண்டும் முருங்கை மரத்தில் ஏற முயல்வதாகத் தகவல்கள் வெளியாவது தமிழர்களை அதிர்ச்சிக்கும், வேதனைக்கும், எரிச்சலுக்கும் உள்ளாக்கியிருக்கின்றது.

எந்தக் கோரிக்கையை முன்வைத்து இம்முறை தாங்கள் நாடாளுமன்றத்துக்கு வந்தோம் என்பதையும், அதை மீறிச் செயற்படுவது வழங்கிய வாக்குறுதியை [illegible]டும் மீறிய செயலல்லாமல், முழுத் தமிழ் இன[illegible]தின் எதிர்கால நலனுக்குமே வேட்டுவைக்கும் - காட்டிக் கொடுக்கும் - நடவடிக்கை என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்து கொள்வது நல்லது.

"தண்ணீர் கூட இரண்டு தடவைக்கு மேல் மன்னிக்காது" என்பார்கள். தமிழ் இனமும் அப்படித்தான் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

# JAFFNA MEDICAL ASSOCIATION

**Annual Sessions**
**February 20th - 22nd 2003**

**The Jaffna Medical Association Cordially invites**

All Doctors, Assistant Doctors, Dental Doctors and Students
to the
Inauguration ceremony
to commence at 9.30 a.m. on 20.02.2003
at the Nurses Training School
(Teaching Hospital, Jaffna)
and
V.T.Pasupathy Memorial lecture
to be held
at 4.00 p.m. on 21.02.2003
***at the Veerasingam Hall, Jaffna.***
The V.T.Pasupathy lecture will be delivered by
**Dr.N.Sreeharan** MD. PhD. FRCP. FACP. FFPM
Senior Vice - President & European Medical Director
Glaxo Smith Kline Research & Development, Europe
(Former Professor of Medicine, Faculty of Medicine, University of Jaffna)
on
MOLECULES TO MEDICINE - PAST, PRESENT and FUTURE
The Memorial lecture will be followed by a Cultural Show
(C/26536)


## கிணற்றில் சடலம்

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த குமாரவேலு வதனி (வயது-23) என்ற அந்த யுவதியின் சடலத்தை நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சுன்னாகம் பொலீஸார் ஒப்படைத்தனர். கடந்த ஞாயிறு மாலை 5.30 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்ட இவரைக் காணாது தேடிய இவரது பெற்றோர், மாலை 7.30 மணியளவில் அயலில் உள்ள வயல் கிணற்றில சடலமாகக கண்டனர். எனினும், சடலத்தை மீட்க பொலீஸார் அனுமதிக்கவில்லை. பின்னர் நேற்றுமுன்தினம் காலை சடலம் பொலீஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-8-15)

## கஷ்டப் பிரதேச பாடசாலைகள்

வடமராட்சி கல்வி வலயத்தில் 20பாடசாலைகள் மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மருதங்கேணிக் கோட்டத்தில் உள்ள 19பாடசாலைகளும் கரவெட்டி கோட்டத்தில் ஒரு பாடசாலையும் அடங்குகின்றன. இப்பாடசாலைகளில் 10.12.1998ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ச்சியாக 3வருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் முகமாக மேலதிக சம்பள ஏற்றம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(எ-182)


## 21 ஆவது பிறந்த தின நினைவலைகளும் 2 ஆவது வருட பெருந்துயர் நினைவஞ்சலியும்

தாயின் மடியில 23 - 02 - 1982



மண்ணின் வித்தாக 19 - 02 - 2001

## துரைரத்தினம் நிஷாந்தி [லெப். புவிதா]

**நிகழ்வுகளில் மகிழ்வுகளை இனங்கண்டு சொல்லியவள்**
**நீண்டதொரு இரவினிலே வெளிச்சத்தைக் காட்டியவள்**
**இறுக்கத்தின் கொடுமைகளில் இனியவைகள் இயம்பியவள்**
**குறும்பான நகைச்சுவையால் சிரிப்பலையில் ஆழ்த்தியவள்**
**இன்றில்லை இனியுமில்லை ஏற்றுக்கொள்ளத் தான்**
**இதயங்கள் மறுக்கின்றன....**

இன்று (19.02.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளும்படி எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
*மு.துரைரத்தினம்,*
*அம்பனை,*
*சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.*

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மைத்துனர் மற்றும் உற்றார், உறவினர்கள்.

(14627)



# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்
**தினம் ஒரு பரிசு - 12**

நாளை (20.02.2003) இடம்பெறவுள்ள ஆஸ்திரேலியா - நெதர்லாந்து ஆட்டத்தில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றும் வீரர் யார்?

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
அ.அட்டை எண்: ........................................

இக் கேள்விக்கான விடையை இந்த கூப்பனில் எழுதி நாளை (20.02.2003) நண்பகல் மணிக்குள் தினம் ஒரு பரிசு - 12, உதயன் பத்திரிகை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்
கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003
**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. ........................ 2. ........................
3. ........................ 4. ........................
5. ........................ 6. ........................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
அ.அட்டை எண்: ........................................




### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்
கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003
**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
அ.அட்டை எண்: ........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு ஹுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

வனிலா சுவையூட்டப்பட்டது

Action


Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்

பிள்ளைகள்
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, விட்டமின் B,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



வாலிபர்
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, சின்க்,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



வயது வந்தவர்கள்
புரதம், கல்சியம், இரும்புச்சத்து,
சின்க், அன்டி ஒக்ஸிடன்
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



கர்ப்பிணி / பாலூட்டும்
தாய்மார்கள்
சக்தி, புரதம், கல்சியம்,
(ƒ)போலிக் அமிலம், விட்டமின் $B_{12}$,
இரும்புச்சத்து, மற்றும் ஏனைய
அத்தியாவசிய போஷனைகள்.



போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.

27 அத்தியாவசிய
போஷணைப்பதார்த்தங்கள்

தகுந்த சின்க் இரும்புச்சத்து
விகிதம்.

தகுந்த கல்சியம்
பொஸ்பரசு விகிதம்.

வயோதிபர்
புரதம், விட்டமின் B,
அன்டி ஒக்ஸிடன் மற்றும்
ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.




450 கிராம்
ரூ.380/=

Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 636741 Fax: 636173
E-mail: astron@astron.lk



# நடமாடும் இலவச கண் சிகிச்சை முகாம்

"உங்கள் கண்களை நாங்கள் காப்போம்"

- உங்கள் கண்களை விசேட கண் பரிசோதகர்களைக் கொண்டு பரிசோதிப்பதற்கும்
- சகல வகையான கண்ணாடிகளை சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்

| பாடசாலை | திகதி | நேரம் |
|---|---|---|
| யாழ். மத்திய கல்லூரி | 19-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை |
| ஹோலி பெமிலி கொன்வன்ட் | 19-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| சென். பற்றிக் கல்லூரி யாழ்ப்பாணம் | 20-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை |
| சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் | 20-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | 21-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம் | 21-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |

அனுசரணை:

## ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்

(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)

54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-02.



A leading International Accountancy Firm seeks self - driven motivated individuals to work in their Office in Jaffna as;

**AUDIT TRAINEES**

Part qualified or students preparing for CIMA / ACCA may apply. A knowledge of English both spoken and written is desirable.

Preference will be given to persons residing in Jaffna.

Please apply with full Bio - data along with contact details of two non-related referees within 10 days of this advertisement to

**P.O.Box 1800,**
**Colombo 10.**

(C/26597)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இலங்கைநாயகம்

*(சிமெந்துக் கூட்டுத்தாபனம், பெயின்ரர்)*

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இலங்கைநாயகம் நேற்று (18.02.2003) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் சுப்பிரமணியம் - மங்கநாயகம் ஆகியோரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை, அருளம்பலம்(வைத்தியர்), பெரியதங்கச்சியம்மா, சின்னத்தங்கச்சியம்மா ஆகியோரின் சகோதரரும் சுசிலாதேவி, அமரர் சகுந்தலாதேவி, குமாரகுலசிங்கம்(கனடா), காந்தி ஆகியோரின் தந்தையும் அமரர் பொன்னுத்துரை, அமரர் சிவகுலராசா, சிவயோகம்(கனடா), திருச்செல்வம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசையா பொன்னாச்சி, வேலாயுதபிள்ளை, சரவணமுத்து, சுப்பிரமணியர் ஆகியோரின் மைத்துனரும் அமரர் தேவேந்திரம் (ஆசிரியர்), புவனேந்திரன்(A.O.திருகோணமலை) ஆகியோரின் சிறியதந்தையும் கணேசரத்தினம் (ஹொலண்ட்), சிவமலர், டாக்டர் சிவகுமார், அமரர் கிருஸ்ணகுமார், பரமசிவம்(MPCS) தலைவாணி, செல்வரூபன்(கனடா), அமரர் சிவரூபன், ஜெயரூபன், ஜெயாகரன், தாட்சாயினி, கிருபாயினி(வட்டு.இந்து) சுதிர்தா(யாழ். போதனாவைத்தியசாலை), சுரேஸ்(வவுனியா பல்கலைக்கழகம்), சுகந்தன், சுமணன்(சுகந்தன் எரிபொருள் களஞ்சியம், திருநெல்வேலி) ஆகியோரின் பேரனும் நதேஜ்தா, பவதாரணி, மௌளிகன், கஜலக்ஷ்மன், ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று(19.02.2003) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை மயானத்தில் பி.ப. 3.00மணிக்குத் தகனம் செய்யப்படவுள்ளதென்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*சிவன்கோவிலடி,*
*சித்தன்கேணி.*

தகவல்:
S.திருச்செல்வம் (மருமகன்)

(14671)


THMC

# உங்களுக்குச் சமாதானம்

# நற்செய்திப் பெருவிழா 2003



சுவி.மோகன் C. லாசரஸ் (இந்தியா)



பாஸ்ரர். வின்சன்ட் சகாயநாதன் (கனடா)

இடம் : மானிப்பாய் செல்லமுத்து மைதானம்

திகதி : பெப்ரவரி 20, 21, 22, 23

நேரம் : பி.ப. 4.00 மணி

அனுமதி இலவசம்



பாஸ்ரர். ஜேரன்ராஜ் (இந்தியா)



அந்தோனி
பலவருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்தேன். ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.



பூங்கோதை
3 வருடங்களாக மார்புக் கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.



ஐசா காதிர் முகம்மது
5 வருடங்களாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, சரீரமெல்லாம் வீங்கியிருந்தது. ஜெபவேளையில் இயேசு விடுதலை தந்தார்.

காலையில் விசுவாசிகளுக்கான வேதப் படிப்பு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தொடர்புகளுக்கு:- 021 222 3653, 021 222 2930

வாருங்கள்! ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்!!

4 நாள்களும் பெருவிழா முடிவில் பிரயாண ஒழுங்கு செய்துதரப்படும்.

**SPONSORED BY: TORONTO HARVEST MISSIONARY CHURCH**
96, Benshire Dr.Scarborough, ON M1H 1M5, Canada.
Tel:(416) 289-3662 Fax:(416) 289 - 2775

(C/26503)










மானிப்பாய் பகுதியில் பத்திரிகையாளர் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் உள்ள தகவல் திணைக்களத்திற்கு முன்னால் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் மேற்கொண்ட கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் கலந்துகொண்டோரையும், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கான மகஜரை ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கையளிப்பதையும் இக்கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுவதையும் -

பத்திரிகையாளர் தாக்கப்பட்டதைக் கண்டித்து வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு ஊடகத்துறை அமைச்சருக்கான தனது மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : தேவராஜன்)*

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குமாறு பிரதமரிடம் கோரிக்கை!

யாழ்ப்பாணம்,பெப்.19

தமக்கு பணி நியமனம் வழங்கப்பட ஆவன செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரியுள்ளது.

பிரதமருக்கு சங்கம் அனுப்பியுள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம், கடந்த காலங்களில் யுத்தத்தின் மத்தியில் சிக்கி, பல இன்னல்களுக்கிடையில் பல்கலைக்கழக படிப்பை முடித்து பட்டம் பெற்று நான்கு வருடங்களுக்கு மேலாக எவ்வித வேலைவாய்ப்புமின்றி பரிதவித்திருக்கும் இவ்வேளையில், அரசுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும பல தடவைகள் எமது அவலங்களை எடுத்துக் கூறியபோதும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

எமது சங்கத்தில் சுமார் 2 ஆயிரத்துக்கும மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்கள் 1998, 1999, 2000, 2001, 2002 ஆண்டுகளில் பட்டம் பெற்று வெளியேறி இதுவரை எந்தவித வேலைவாய்ப்புககளும் இன்றி இருக்கின்றார்கள். ஏனைய மாவட்டத்திலுள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ள நிலையில், யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கக் கூடிய வழிகள் இல்லை என்பது யாவரும் அறிந்ததே. அரசினால் வழங்கப்படுகின்ற நியமனங்களில் கூட காலதாமதங்கள் ஏற்படுகிறது. அத்துடன் ஏற்கனவே நிரந்தர பட்டதாரி நியமனத்தில் உள்ளவருக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதனால் வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். ஆகவே பின்வரும் எமது கோரிகைகைகளை பரிசீலித்து ஆவன செய்யவும்.

15.07.2002, 03.01.2003 வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில ஏற்காதவர்களின் நியமனத்தை தாமதமின்றி இரத்துச் செய்து உடனடியாக நியமனம் வழங்கப்படுவதுடன் அனுமதி வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை தாமதமின்றி வழங்கவேண்டும்.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இதுவரை வழங்கப்படாத இளைஞர் சேவை உத்தியோகத்தர் வெற்றிடத்தை நிரப்பவேண்டும்.

சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை வேலையற்ற பட்டதாரிகள் மூலம் நிரப்புதல். அத்துடன், சேவையில் உள்ளவர்களை ஒப்பந்த அடிப்படையில் சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கோரப்பட்ட விண்ணப்பத்தை இரத்துச் செய்யுமாறு கோருவதுடன் எதுவித அரசியற் தலையீடுமின்றி சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை நிரப்ப வேண்டும்.

அரச திணைக்களங்கள், கூட்டுத தாபனங்களில் உள்ள பட்டதாரி வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள் மூலம் நிரப்புதல்.

கணக்காய்வு அத்தியட்சகர் போட்டிப் பரீட்சை முடிவை வெளியிட்டு நியமனம் வழங்குதல்.

'தருண அருண' பட்டதாரி தொழில பயிற்சி திட்டத்தை நடைமுறைப்படுததுதல்.

மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைக்கு உடனடியாக சாதகமான பதில் தந்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் துயரங்களை தீர்த்துவிடுவீர்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் - என்றுள்ளது.

(ஒ)

## புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை வைத்திருந்ததற்காக

# பட்டிருப்புப் பால சோதனைச் சாவடியில் பெரியபோரதீவுவாசி மீது தாக்குதல்!

களுவாஞ்சிக்குடி,பெப்.19

- விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெரியபோரதீவைச் சேர்ந்த கோடீஸ்வரன் என்பவர் பட்டிருப்புப் பாலசோதனைச் சாவடியில் விசேட பொலஸ் அதிரடிப படையினரால் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு செல்வதற்காக களுவாஞ்சிக்குடி நோக்கி வந்து கொண்டிருந்த போது இத்தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளையிடம் கோடீஸ்வரன் முறையிட்டார்.

பொத்துவில் கட்டளையிடும் பொலஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்தினவின் கவனத்திற்கு இச்சம்பவத்தை கிருஷ்ணபிள்ளை எம்.பி. கொண்டுவந்தார்.

கோடீஸ்வரனைத் தாக்கியது தொடர்பாக விசாரணை நடத்தி உடன் நடவடிக்கை எடுப்பதாக பொலீஸ் அத்தியட்சகர் எம்.பியிடம் உறுதியளித்துள்ளார்.

(ஐ)

# நெல் கொள்வனவு செய்ய கூட்டுறவு சங்கத்துக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து பெரும் போக விவசாய நெல்லைக் கொள்வனவு செய்து அதனை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகளுக்காக 30 லட்சம் ரூபாவை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன முன்வந்துள்ளார். நெல்லைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கென லொறி ஒன்றையும் வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் கடுமையான பாதிப்புக்குள்ளான தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நிலைமைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும

சங்கத்திற்கான மேலதிக வசதிகளை வழங்குவதற்கும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன உறுதியளித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சிசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஓ-8)

# சங்கானை மீன்சந்தை வாய்க்காலை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்குக!

## சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

வலி.தெற்கு,பெப்.19

பொதுச் சுகாதார பரிசோதகரின் வேண்டுகோளை ஏற்று சங்கானை மீன் சந்தை வாய்க்காலை உடனடியாக துப்பரவு செய்து திருத்தியமைக்குமாறு வலிகாமம் மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராசா வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரைக் கேட்டுள்ளார்.

மீன்சந்தையின் வடக்குப் புறமாக அமைக்கப்பட்டுள்ள வாய்க்காலில் கழிவுநீர் ஓடமுடியாது தடைப்பட்டு தேங்கி நிற்பதாகவும் -

இதனால் அப்பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் - அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனை அடுத்து வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராசா, வைரஸ், டெங்கு போன்ற காய்ச்சல்கள் தற்போது விரைந்து பரவி வருவதாகவும் நுளம்புப் பெருக்கத்தால் பலவித நோய்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் எடுத்துக்காட்டி மேற்படி வாய்க்காலை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறும் -

கழிவுநீர் தேங்கி நிற்காது வழிந்தோடக்கூடியவாறு வாய்க்காலை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-152)

## வெடிக்காத ஷெல்கள் மீட்கப்பட்டன!

சாவகச்சேரி மருதடி இலுவம் பிள்ளையார் கோவில் பகுதியில் வெடிக்காத நிலையில் 15 ஷெல்களும் மிதிவெடி ஒன்றும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டன.

முன்னர் இப்பகுதியில் படையினரின் ஷெல் தளம் அமைந்திருந்ததாகவும் - இப்பகுதியில் தற்போது படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# எமக்குத் துணை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபடுகின்றனர். இது பற்றிய செய்திகளை அறிந்த டெண்டுல்கர், நேற்று இந்திய ரசிகர்களிடம் இந்தக கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் "எங்களுடைய ஆட்டம் எமக்கே பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. அந்த ஏமாற்றம் உங்களையும் பெருமளவில் தாக்கியிருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

"நாங்கள் இனிவரும் அனைத்து ஆட்டங்களிலும் கடைசிப் பந்து வீசப்படும் வரை போராடுவோம். எனவே நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, எங்களுக்குத் தொடர்ந்து துணையிருங்கள். கடந்தவைகளை மறந்து நீங்கள எமக்கு நிச்சயம் உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்" - என்றுள்ளது.

இந்திய ரசிகர்கள் அனைவரது செயற்பாடுகளும் இந்திய அணியை வாழ்த்துவதாகவே அமைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இந்திய ரசிகர்களின் கோபம் இன்னும் தீர்ந்தபாடில்லை.

தனியார் தொலைக்காட்சி ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின்படி 80 சதவீதமான ரசிகர்கள் இந்திய வீரர்கள் விளம்பரப்படுத்தும் பொருள்களை புறக்கணியுங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

செல்லிடப் பேசிகளின் குறும் தகவல் சேவைகள் (**Short Message Service-SMS**) மூலமும் "இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் நடித்து விளம்பரப்படுத்தப்படும் எந்தப் பொருளையும் நாம் வாங்க வேண்டாம் என்று பிரமாணம் எடுத்துக் கொள்வோம்" என்ற செய்தி நாடு முழுவதும் பரப்பப்பட்டு வருகின்றது.

பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து தமது விளம்பரங்களில் இந்திய வீரர்களை நடிக்க வைத்த நிறுவனங்களுக்கு இது வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. ரசிகர்களின் உணர்வுகளைப் நாடிபிடித்தறிந்த நிறுவனங்கள் சில ஏற்கனவே கிரிக்கெட் வீரர்கள் தோன்றும் தமது விளம்பரங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன என 'டைம்ஸ் ஓவ் இந்தியா' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## தென்னாபிரிக்க...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றார் வூல்மர்.

தென்னாபிரிக்கா ஏற்கனவே தான் விளையாடிய மூன்று ஆட்டங்களில் இரண்டில் தோற்றுள்ளது. மேற்கிந்தியாவுடனும் நியூஸிலாந்துடனும் நடந்த ஆட்டங்களில் தோற்றதனால், இனிவரும் ஆட்டங்களை அது வென்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. அவ்வாறு செய்தாலே அணி 'சுப்பர் சிக்ஸ்"க்குள் நுழைய முடியும்.

இந்த நிலையிலேயே வூல்மர் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். "இப்போதைய நிலை விரும்பத்தக்கதல்ல. எனினும் அந்த நிலையை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 'சுப்பர் சிக்ஸ்"க்குள் செல்வது குறித்துக் கவலைப்படாமல் அவர்கள் கிரிக்கெட்டை ரசித்து ஆடுவதற்கு முயல வேண்டும்" என்று வூல்மர் மேலும் தெரிவித்தார்.

(ம)

## சிம்பாப்வே...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாப்வே போட்டிக்கு பீட்டர் வில்லிக்குப் பதிலாக நியூஸிலாந்து நடுவர் பில்லி போடன் நியமிக்கப்பட்டுள்ளார். நெதர்லாந்து - சிம்பாப்வே போட்டிக்கான மூன்றாவது நடுவராக பாகிஸ்தானின் நதீம் கோரி நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, மல் லேந்தருக்குப் பதிலாக தென்னாபிரிக்காவின் பிரையன் ஜேர்லிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள போட்டியில் ஆஸ்திரேலியா பங்குபற்றுமா என்பது இன்னும் சந்தேகத்திற்கிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணி போட்டியிலிருந்து வாபஸ் பெற்றமையால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை இன்னும் சிம்பாப்வே கிரிக்கெட்சபை அதிகாரிகள் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் நடுவர்களின் விலகல் சிம்பாப்வே அதிகாரிகளை மேலும் ஆத்திரமூட்டியுள்ளது.

"தற்போது இந்திய அணியினர் தங்கியுள்ள ஹோட்டலில் நான் இருக்கிறேன். இங்கும் எமது மைதானங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளன. பீட்டர் வில்லியோ, வேறு எவருமோ இது தொடர்பாக கவலையடையத் தேவையில்லை."

- இவ்வாறு சிம்பாப்வே கிரிக்கெட் யூனியனின் பிரதம நிறைவேற்று அதிகாரி வினஸ் ஹோக் நேற்று கூறினார்.

# சிறப்பாட்டக்காரர்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபவருக்கு 3 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாவது சிறந்த வீரருக்கு 2 புள்ளிகளும் மூன்றாவது வீரருக்கு ஒரு புள்ளியும் வழங்கப்படும்.

இதன்படி ஆகக்கூடுதலான மொத்தப் புள்ளிகளைப் பெறும் வீரர் தொடரின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்படுவார்.

பெப்ரவரி 17ஆம் திகதிவரை நடந்த போட்டிகளில் குளுஸ்னர் மொத்தமாக 5 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இலங்கை அணித் தலைவர் சனத ஜயசூரிய, வஸிம் அக்ரம், ஹேர்ச்சல கிப்ஸ், நெதர்லாந்து வீரர் ரிம் டி லீட ஆகியோர் தலா 4 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளனர்.

விவரம்:-

| வீரர் | அணி | புள்ளி |
|---|---|---|
| லான்ஸ் குளுஸ்னர் | தென்னாபிரிக்கா | 5 |
| வஸிம் அக்ரம் | பாகிஸ்தான் | 4 |
| ரிம் டி லீட் | நெதர்லாந்து | 4 |
| ஹேர்ச்சல் கிப்ஸ் | தென்னாபிரிக்கா | 4 |
| சனத் ஜயசூரிய | இலங்கை | 4 |
| அன்ரூ அடம்ஸ் | நியூஸிலாந்து | 3 |
| ஜேம்ஸ் அன்டர்ஸன் | இங்கிலாந்து | 3 |
| இயன் பில்கிளிப் | கனடா | 3 |
| ஏ.கொடரிங்டன் | கனடா | 3 |
| ஸ்ரீபன் பிளமிங் | நியூஸிலாந்து | 3 |
| ஜேசன் ஜிலெஸ்பி | ஆஸ்திரேலியா | 3 |
| பிரையன் லாரா | மே.இ.தீவுகள் | 3 |
| தோமஸ் ஒடாயா | கென்யா | 3 |
| சமிந்த வாஸ் | இலங்கை | 3 |
| கிரேக் வைஷார்ட் | ஸிம்பாப்வே | 3 |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.கனகசபை சுந்தரலிங்கம்

(காரை மணிகண்டன்)

அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு திரு.கனகசபை சுந்தரலிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஐயப்பன் அருளால் அவர் இன்னும் பல உயர் பதவிகளைப் பெற்று மக்களுக்குச் சேவைசெய்யவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*'சிவசக்தி'*
*விளானை,காரைநகர்.* (C-26606)

சோ.சிவகுமார் குடும்பத்தினர்


**இப்போது யாழ். நகரில்**

இலங்கையின் முன்னணியிலுள்ள முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட
Asiri Hospital LTD.; COLOMBO - 5 இன்
**ஆய்வுகூட சேவை**
எல்லாவிதமான இரத்த, சல பரிசோதனைகளும் செய்துகொள்ளலாம்.

**JAFFNA MEDICAL CENTER**
*678, Hospital Road,*
*Near O.L.R. Church.*
(Laboratory and Authorized Collecting Center
For Asiri Hospital LTD.) (14689)


## இலங்கை குடித்தொகைச் சங்கம் நடத்தும்
## அதிதி விரிவுரை


கருத்துரை : வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குடித்தொகை தீர்மானித்தல்
கருத்துரையாளர் : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)
தலைமை : பேராசிரியர் கா.குகபாலன், தலைவர், புவியியற்றுறை
காலம் : நாளை (20.02.2003) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணி
இடம் : புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கை குடித்தொகைச் சங்கம்,
கொழும்பு பல்கலைக்கழகம். (14694)

பேராசிரியர் கே.ஏ.பி.சித்திசேன
தலைவர்


**சந்நதிமுருகன் வேக்ஷொப் அன் சேவிஸ்**



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின் அதிகாரம் பெற்ற சேவை முகவர் நிறுவனத்தினரால்
★ மோட்டார் சைக்கிள்
★ மோட்டார் வண்டி (ஆட்டோ)
என்பவற்றுக்கு சேவிஸ் செய்தும் திருத்த வேலைகள் செய்தும் சேவை வழங்கப்பட்டுக்கொண்டிருப்பதனை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதுடன், இம்மாத இறுதிக்குள் பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஆட்டோக்கள் என்பவற்றுக்கான முதலாவது இலவச சேவிஸ் எம்மால் வழங்கப்படும். ஏனைய மோட்டார் சைக்கிள்களுக்கும் குறைந்த கட்டணத்தில் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

மோட்டார் சைக்கிள் - 200 ரூபா
ஆட்டோ - 400 ரூபா

**SANNATHY MURUGAN**
**WORK SHOP & SERVICE,**
இல,211 பருத்தித்துறை வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.
T.P.: 071-214673, 0777-110199, 021-2225209 (14688)


## தவறிவிட்டது

18.02.2003 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிவந்த பஸ்ஸில் (இல.789) Sagam(Mc3000) கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

S.சுகந்தன்
குமுக்கன் லேன், அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
T.P- 071355140 (14695)

## தேவை

**தொலைபேசி இயக்குநர், உதவியாளர்**

திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு க.பொ.த (உயர்தரம்) கல்விகற்ற, கொம்பியூட்டரில் பூரண அறிவுடைய பெண்பிள்ளையொருவர் தேவை. திருநெல்வேலிக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உதவியாளராக 20 வயதுக்குட்பட்ட ஆணொருவரும் தேவை.

*தொடர்பு:-* விள.இலக்கம் 1789
உதயன் பணிமனை
யாழ்ப்பாணம். (14692)

உ
ஓம் சாயிராம்

## நெஞ்சைவிட்டகலாத 50 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி தம்பிஐயா செல்லம்மா

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புக்கோர் அணிகலனாய்
உலகம் புகழும் உத்தமியாய் எம்மை அரவணைத்த -தெய்வமே!
எங்களை வாழவைத்துவிட்டு மீளாப்பயணம் -சென்றனையோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமதில்லம் நாடி ஓடோடி வந்து பல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இன்று (19.02.2003) புதன் கிழமை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவதேவி வாசம்",
இணுவில் மேற்கு,
இணுவில். (14690)

அருமைச் சகோதரர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி லூயிஸ் சின்னையா செல்லம்மா

தேவாலய வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி லூயிஸ் சின்னையா செல்லம்மா நேற்றுமுன்தினம் (17.02.2003) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற லூயிஸ் சின்னையாவின் அன்பு மனைவியும் அருளம்பலம் (கொழும்பு), ஞானம் (கொழும்பு), லில்லி (கொழும்பு), ஞானமலர் (மலரக்கா), கிரேஸ் (குஞ்சு - கொழும்பு) ஆகியோரின் அருமைத்தாயாரும் சந்திரவதனா, தேவராசா காலஞ்சென்ற ஜெயரத்தினம் மற்றும் அற்புதராசா (சுன்னாகம் M.P.C.S.), ராஜா ஆகியோரின் மாமியாரும் சுமந்திரன் (ஆசிரியர், வேலணை நாகராசா ம.வி.), சுரேந்திரன் (யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரி), சுதாகரன், சுயந்திரன் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), ஐசாக் விஜயகாந்தன், திருமதி ரஜீவி தேவகுமார் (கொழும்பு), திருமதி ரொஷானி (அம்பி - லண்டன்), திருமதி ஜெனிற்றா எமில் (கனடா), அனுஷா (உடுவில் மகளிர் கல்லூரி (உ/த) வகுப்பு மாணவி), பிரபாத் (சென்.ஜேம்ஸ் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் (ஆசிரியை), ராஜ்ஜியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருமதி நைல்ஸ், திருமதி குக், எட்வின் துரைச்சாமியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (19.02.2003) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை, கரைச்சி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.* (C-26607)

தகவல்:
அ.ஞானமலர் (மகள்)
மு.அற்புதராசா (மருமகன்)

## தசமதின (10 தினம்) இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

இணுவில் விசாலாட்சி சமேத
விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில்

இன்று (19.02.2003) புதன்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பம். பத்துத் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் நடைபெறும். 1.3.2003 சனிக்கிழமை சிவராத்திரியன்று காலை 6.00 மணிக்கு குளிர்த்தி அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் திருவுலாவும மாலை சிவராத்திரி 4 சாமமும் அபிஷேகம் விசேட பூசை நடைபெறும்.

*ஆலய பிரதமகுரு:*
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள் (சபரீச தாசன்)

*ஆலய அர்ச்சகர்:*
பிரம்மஸ்ரீ வா.ஜெனார்த்தன சர்மா

தர்மகர்த்தா
ஸ்ரீ.பரமேஸ்வரன்.

(14691)



## சுன்னாகத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை விடுதிகளை திருத்துவதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி விடயம் சம்பந்தமாக 2003.02.11ஆம் திகதி விளம்பரப் படுத்தப்பட்ட எமது விளம்பரம் தொடர்பாக, கூறுவிலை சமர்ப் பிக்கப்படும் கடைசித் தினம் 2003.02.25 காலை 10.30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-26609)

தலைவர்,
வடமாகாண மின்சாரசபை,
கேள்விக்கோரல்.



## CHEMISTRY - ஆசிரியர் அன்பழகன்

**A/L 2005** மாணவர் நலன்கருதி
கீழ்வரும் இடங்களில் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| NEW SCIENCE CENTRE | - யாழ்நகர் |
| CHEMISTRY CENTRE | - கந்தர்மடம் |
| ஈசன் கல்வி நிலையம் | - கோண்டாவில் |
| PERSENEL CENTRE | - Cathedral Road |
| SUBRA (14) | - சித்தன் கேணி |
| ஞானோதயா | - சாவகச்சேரி |
| குகன் | - ஆவரங்கால் |
| SCIENCE ACADEMY | - நெல்லியடி |

(4709)



எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும் சில வாரங்கள் மட்டும்

## காவேரி சில்க்ஸின்

மாபெரும் மலிவு விற்பனை
தொடர்கிறது

இவ்வாறும் உங்கள் தெரிவுக்கு

*வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட*
*புத்தம் புதிய பலரக ஆடைகள்*

✳ கவுண் ✳ சோளிகிட் ✳ பஞ்சாபி
மற்றும்
✳ பட்டுமுதல் பருத்திவரையிலான சாறிவகைகள்
✳ BOX சேட், சூட்டிங் வகைகள்
✳ பிறிண்டெட் துணிவகைகள்
✳ படுக்கை விரிப்புக்கள்

இன்னும் பல்பல தெரிவுகள் யாவும்

பாதிக்கு பாதி விலை

*தரம் நாடுவோர்,*
*பணத்தின் பெருமையறிந்தோர்*
*என்றும் நாடுவது*

## காவேரி சில்க்ஸின்

மலிவு விற்பனை இங்கே

77 பெரியகடை, யாழ்ப்பாணம் (22608)


# வென்றேயாகவேண்டும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் நிலையை இந்திய அணி குறித்து எதுவும் சொல்வதற்கில்லை. பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்துடனான ஆட்டங்கள் இந்தியாவுக்கு அவ்வளவு சுலபமானதாக இருக்கப்போவதில்லை. அவற்றுடன் பலம்கொண்டு மோத வேண்டுமெனில் - அதற்கான தார்மீகப பலத்தை பெறவேண்டின் - இன்றைய ஆட்டத்தில் இந்தியா வென்றே ஆக வேண்டும்.

அதனால்தான் அணியின் பயிற்றுநர் ஜோன் ரயிட் இந்த ஆட்டத்தில் வென்று ஓட்டங்களைக் குவித்தால் தான் சுப்பர் சிக்ஸ் நிலைக்கு நிச்சயம் தகுதி பெறமுடியும் என்று சொன்னார். சிறந்த 7 துடுப்பாளர் வரிசையைக் கொண்டுள்ள இந்திய அணி அண்மைக்காலமாக ஓட்டங்களை குவிக்கத் திணறுகின்றது. நியூஸிலாந்து சுற்றுப்பயணத்திலிருந்து அவுஸ்திரேலியாவுடனான உலகக் கிண்ண ஆட்டம் வரை நடந்த ஆட்டங்களில் இந்திய துடுப்பாளர்கள் முழுமையாக 50 ஓவர்களும் நின்று ஆடவில்லை என்பது கவனத்துக்குரிய ஒன்று. எங்கேயோ பிழைக்கிறது. விரைவில் அது சரிசெய்யப்பட்டாக வேண்டும். அணி சரிவிலிருந்து மீள்வதற்கு அது ஒன்றே வழி.

அந்த வழியில் ஒன்றாக ஆரம்ப துடுப்பாட்ட வரிசை இன்று பரிசோதனைக்குள்ளாகலாம் என்று தெரிகிறது. அண்மைய ஆட்டங்களில் பிரகாசிக்காத கங்குலிக்கு பதில் ஆரம்ப துடுப்பாளராக சச்சினுடன் ஷேவாக் களமிறங்கலாம்.

ஹராரேயில் நேற்று பேசிய ஜோன ரைட் இதனை கோடிகாட்டினார். "இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிகப்பலமாக அமைந்துவிட்ட ஒன்று. ஆனால், தொடர்ந்து ஒருவர் தன் திறமைக்கு குறைவாக ஆடிவரும் பட்சத்தில் உரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது" - என்றார் அவர். எனினும் துடுப்பாளர் வரிசை குறித்து இன்னும் குழப்பமே நிலவுகிறது. களம் இறங்கும்போதே மாற்றங்கள் குறித்து தெளிவாகத் தெரிய வரும். என்ன இருந்தாலும் எந்த மாற்றங்களைச் செய்தாலும் இந்தியா வென்றே ஆகவேண்டும். இது அவர்களுக்கு விதிக்கப்பட்ட முடிவு.

அதற்காக சிம்பாப்வேயையும் குறைத்து மதிப்பிட முடியாது. சொந்த களத்தில் ஆடுவது அதற்கு மேலும் பலம். அணியின் உள்ளே அரசியல் இருந்தாலும் வேகமும் துடிப்பும் இருக கிறது. அண்டி பிளவர் போன்ற அனுபவங்களும் நிறையவே இருக்கிறது. இந்தியா நிதானமாகத்தான் செயற்பட்டே ஆக வேண்டும்.

இன்றைய போட்டி குறித்து நேற்று பத்திரிகையாளர்களிடம் பேசிய அண்டி பிளவர், இந்தியர்களுக்கு சரியான சவாலை அளிப்போம் என்று கூறியிருக்கிறார். அவரின் தன்னம்பிக்கை இங்கே கவனத்துக்குரியது. ஆஸ்திரேலிய அணியால் துவம்சம் செய்யப்பட்டு பலவீனமான நிலையில் இருக்கும் இந்திய அணியை அது சரிவில் இருக்கும் போதே தோற்கடிப்பது சுலபம என்றும் அவர் சொன்னார். சிம்பாப்வேயின் திட்டம் என்ன என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

இந்திய அணியின் வலிமைமிக்க துடுப்பாளர் வரிசையை தகர்த்துவிட்டால் வெற்றி நிச்சயம் என்கிறார் அண்டி பிளவர். விக்கெட்டுக்களை கைப்பற்றுவதே எமது நோக்கம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"அவர்களுடைய பீரங்கிகள் வெடிப்பதற்கு முன்பே அவற்றை தகர்த்துவிட வேண்டும்" - இது அண்டி பிளவரின் கூற்று. தகர்ப்பதற்கு முன் இந்தியர்களின் பீரங்கிகள் வெடித்தே ஆக வேண்டும். இது காலத்தின் கட்டாயம். நிறைவேற்றுவார்களா இந்தியர்கள்.

- கனிமொழி.

## பொலக் மீது....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டியுள்ளது. இந்தத் தோல்விக்கு பொலக்கே காரணம் என்றும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.

'சிற்றிசன்' என்ற பத்திரிகை, "அணியின் நம்பிக்கை ஊசலாடுகின்றது" என்று எழுதியுள்ளது. "இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி என்று தென்னாபிரிக்காவைப் பலரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், அந்தக் கனவு வெகு தொலைவிற்குச் சென்றுள்ளது"- என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

டொனால்ட் பற்றி விமர்சித்துள்ள அப்பத்திரிகை, அவரது பாதை முடிந்துவிட்டதாகவே தான் கருதுவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

அணியின் ஆரம்பத்துடுப்பாளர்களில் ஒருவரான கிப்ஸ்ஸும் பொலக்கின் தலைமை பற்றி விமர்சனம் செய்திருந்தார். அதற்கு மாறாக அணியின மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் திறமையான துடுப்பாளருமான ஹேரி ஹேர்ஸ்டன், பொலக்கின் சார்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். "அணியின் ஒட்டுமொத்த திறமைக் குறைவுக்காக தனி ஒருவரை மட்டும் குற்றஞ்சாட்டுவது சரியானதாகப்படவில்லை. அதற்கு நாம் எல்லோரும் தான் பொறுப்பு" - என்றார் அவர்.(ம)


### வேலை வாய்ப்பு

ஸ்கிரீன் பிறிண்டிங் செய்வதற்கும், தையல் வேலை செய்வதற்கும் பெண் உதவியாளர்கள் தேவை.
இத்துறையில் பயிலுநராகவும் சேரலாம். நேரில் வரவும்.

*வலம்புரி பிறிண்டிங் இன்டஸ்றீஸ்,*
இல.19, சம்பியன் லேன், கொக்குவில். (14654)



### ரூபா மனைப்பொருளியல் நிலையம்

புதிய வகுப்புகள் ஆரம்பம் : 20.02.2003 காலை 9.30

✳ கேக்ஐசிங் ✳ தையல்
✳ தலையலங்காரம் ✳ சமையற்கலை
✳ துணிகளுக்கு வர்ணம் தீட்டுதல்

குறிப்பு:- பழைய மாணவிகள் பரீட்சை, சான்றிதழ் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலுக்கு 23.02.2003 ஞாயிறு காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும்.

*தொடர்பு:-*
ரூபா சத்தியமூர்த்தி
41,இராஜ வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (C/26611)



### யா/யாழ்ரன் கல்லூரி - காரைநகர் உயிரியல் விஞ்ஞான பட்டதாரி தேவை

உயிரியலும் இரசாயனவியலும் கற்பிக்கக்கூடிய பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முடிவு திகதி: 28.02.2003

*யா/யாழ்ரன் கல்லூரி,*
*காரைநகர்.* (14698)

தலைவர்/அதிபர்
பாடசாலை அபிவிருத்திச்சபை.



### நிபுணத்துவ வைத்திய சேவை

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இங்கிலாந்திலிருந்து மீண்டும் யாழ். நகருக்கு வருகைதந்த பிரபல மாற்று மருத்துவ நிபுணரும் சர்வதேச வைத்திய, விஞ்ஞானப் பதிவேட்டில் பதிவு பெற்றவருமான
**டாக்டர் மருது கந்தப்பு PhD அவர்களால்**

வாத உபாதைகள், மூட்டுகளில் வலி, நாரிப்பிடிப்பு, இருதயக் கோளாறு மற்றும் Tension காரணமாக ஏற்படும் வியாதிகளுக்கும் மேலைநாட்டு **Osteopathy, CNT, SMAT**

ஆகிய புதிய முறைகளால் விசேட சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இடம்: பிலிப்ஸ் நேசிங் ஹோம்,
228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. :- 077-6005425 222-5051

☆ மேலதிக விபரங்களுக்கு 23. 02. 2003 உதயனையும் பார்க்கவும். (14703)



### தேவை

வாகன தரத்தில் உள்ளவர்களும் தட்டு வேலை செய்பவர்களும் பாண் வர்ணியோகஸ்தர்களும் உடன் நேரில் வரவும்.

றொலெக்ஸ் பேக்மார்ட்,
*118, கஸ்தூரியார் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (14697)



### காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:-* சி.ரஞ்சன்
168, சேர் பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
சந்திக்கும் நேரம்: பி.ப. 02 - 05 மணி (14696)



### ராஜா யாழ்ப்பாணம்

5 ஆவது வாரம்
விஜய், ஸ்நேகா, வடிவேல்
**வசீகரா**
10.30, 2.30, 6.30
THE MUMMY RETURNS
இரவு 9.30 மட்டும் 17முதல் 19வரை.



### நிறைஞ்சனாஸ் சங்கானை

*பிரசாந், சிம்ரன நடித்த*
**ஜோடி** (தினசரி)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்) (C/26295)



### நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், மீராஜஸ்மின், ரகுவரன், விவேக் நடித்த
**ரன்** (தினசரி)
காட்சிகள் தினசரி: 11.30, 3.00, 6.30 (புதிய) (14685)


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சர்வேந்திரம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் போஸ்டன் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சர்வேந்திரம் அவர்கள் 15.02.2003 சனிக்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூங்கோதை அவர்களின் அன்புக் கணவரும், சரவணா, சங்கரா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சுன்னாகத்தைச் சேர்ந்த முன்னாள் தபாலதிபர் சரவணமுத்து - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சி.அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர், வைத்தீஸ்வரா கல்லூரி) - திருமதி நகுலாம்பிகை அம்பிகைபாகன் ஆகியோரின் அன்பு மருமகனும் சபொன்னம்பலம் (முன்னாள் அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி - ஆஸ்திரேலியா), ஆ.சரோஜா தேவி (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டாக்டர் பொ.குணபூபதி (ஆஸ்திரேலியா), ஆனந்தகுமாரசாமி (கணக்காளர், லண்டன்), கலாநிதி பாலசுப்பிரமணியம் - காயத்திரி (அமெரிக்கா), கலாநிதி செந்தில் செல்வன் - லோகேஸ்வரி (கனடா), நவானந்தன் ஆனந்தகௌரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2003) புதன்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அ.நகுலாம்பிகை
(மாமியார்)
'மணிமனை', மல்லாகம்.

*T.P - 001 7812722407*
*(அமெரிக்கா)* (14700)

# பங்களாதேஷ் - மேற்கிந்திய போட்டி கடும் மழையினால் கைவிடப்பட்டது!

பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி கடும்மழை காரணமாகக் கைவிடப்பட்டது.



தென்னாபிரிக்காவின் பெனோனி நகரில் நேற்று இப்போட்டி நடைபெறறது.

நாணயச் சுழற்சியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது. அதையடுத்து மேற்கிந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்களைப்பெற்றது அவ்வணி. ரிக்கார்ட்டோ பொலவெல, 31பந்துவீச்சுக்களில் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

இத்தொடரில் அடிக்கப்பட்ட மிகவும் வேகமான அரைச்சதம் இதுவாகும்.

பங்களதேஷ் அணி துடுப்பெடுத்தாடிய போது மழை குறுக்கிட்டது. அப்போது பங்களதேஷ் அணி 8.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன்பின் ஆட்டம்தொடரப்படவில்லை. இதனால், இரு அணிகளும் தலா இரு புள்ளிகளைப்பெற்றன.

மேற்கிந்திய அணி வெற்றியீட்டத் தவறியமையால் தென்னாபிரிக்க அணி சுப்பர்சிக்ஸ் சுற்றுத் தகுதி பெறலாம் என்ற நம்பிக்கை நீடித்துள்ளது. இரு அணிகளும் தலா 3 போட்டிகளில் பங்குபற்றியுள்ளன. மேற்கிந்திய அணி தற்போது 6 புள்ளிகளையும் தென்னாபிரிக்கா 4 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (ஐ)

## இன்று கறுப்புப்பட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சகல திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் இன்று கறுப்புப்பட்டி அணிந்து தமது பணிகளில் ஈடுபடுவர்.

நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்காத வகையிலும், மக்களின் இயல்பு நிலைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் போராட்டத்தை மேற்கொள்ளும்படி பொது அமைப்புகள் கோரியுள்ளன.

வாகனங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3-17)

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்

சிங்கர்

புதிய பார்வை

இல.1.ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

முடிவு: மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது.

இதனால் புள்ளிகள் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### மேற்கிந்திய தீவு

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| டபிள்யு.ஹின்ட்ஸ் | c/சஹறாரியர் | b/மஸுத் | .... | 18 |
| ஜி.எச்.கைல் | c/ஹொசைன் | b/இஸ்லாம் | .... | 00 |
| பி.சி.லாறா | c/சஹறாரியர் | b/இஷானுல்ஹக் | .... | 46 |
| எஸ்.சந்தர்போல் | | b/இஷானுல்ஹக் | .... | 29 |
| சி.எல்.ஹூப்பர் | c&b/கபாலி | | .... | 45 |
| ஆர்.சர்வான் | c&b/மஸுத் | | .... | 13 |
| ஆர்.எல்.பவல் | c/ஹொசைன் | b/இஸ்லாம் | .... | 50 |
| ஆர்.டி.ஜேக்கப்ஸ் | not out | | .... | 06 |
| வி.சி.டிராக்கஸ் | run out | | .... | 00 |
| எம்.டிலான் | c/அஷ்ரப்புல் | b/இஸ்லாம் | .... | 10 |
| சி.டி.கொலிமோர் | not out | | .... | 00 |
| உதிரிகள் | | | .... | 27 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 244/9 |

பந்துவீச்சு

இஸ்லாம்: 10-0-62-3, ஜுபைர்: 8-0-46-0, மஸுத்: 10-1-48-2, ஹக்: 10-0-34-2, ரபிக்: 10-0-44-0, கபாலி: 2-1-3-1.

### பங்களாதேஷ்

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| எஸ்.ஸஹறாரியர் | c/கைல் | b/டிராக்கஸ் | .... | 05 |
| எஹ்சானுல் ஹக் | | b/டிலான் | .... | 12 |
| எம்.அஷ்ரப்புல் | not out | | .... | 08 |
| எஸ்.ஹுசைன் | not out | | .... | 02 |
| உதிரிகள் | | | .... | 05 |
| மொத்தம் | (8.1 ஓவர்கள்) | | .... | 32/2 |

துடுப்பெடுத்தாடாதோர்: ஏ.கபாலி, கே.மஸுத், கே.மஹ்மூத், எம்.இஸ்லாம், எம்.ரபீக், தி.ஜுபைர், ரி.இம்ரான்.

பந்துவீச்சு

டிலான்: 4.1-0-13-1, டிறாக்கஸ்: 4-1-17-1.

### இன்றைய ஆட்டங்கள் - பெப். 19

| | | | | |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து | Vs | நமீபியா | போர்ட்எலிசபெத் | 2.00p.m. |
| இலங்கை | Vs | கனடா | போர்ஸ் | 2.00p.m. |
| இந்தியா | Vs | ஸிம்பாப்வே | ஹராரே | 2.00p.m. |

## வரதர் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வர் கைக்குண்டை எறிந்துவிட்டுச் சென்றனர் எனக் கூறப்பட்டது. வீட்டின மதில் சேதமடைந்திருக்கிறது.

இச்சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் முறையிடப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ-9)

## தலைமறைவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்றம் நெப்போலியனுக்குப் பிடியாணை பிறப்பித்துள்ளது. ஆனால், அவர் இன்னமும் தலைமறைவாகவே உள்ளார்.

நெப்போலியன் சார்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நெப்போலியன் தெரிவித்திருப்பதாவது:-

நான் ஊர்காவற்றுறை நீதிமன்றில் சரணடைந்து யாழ்.சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட விரும்பவில்லை. நான் இன்னமும் ஈ.பி.டி.பி. சார்பான பிரதேச சபை உறுப்பினராக இருப்பதால், எனது உயிருக்கு அச்சுறுத்தல ஏற்படும் என அஞ்சுகிறேன். இதே காரணத்துக்கான கிழக்கிலோ அல்லது களுத்துறையிலோ விளக்கமறியலில் வைக்கப்படவும் நான் விரும்பவில்லை.

ஆகவே, கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நான் சரணடையவும், வெலிகடைச் சிறையில் என்னை விளக்கமறியலில் வைக்கவும் அனுமதிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்.

அதன்பின்னர் நான் பிணை கோரி வவுனியா மேல்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்வேன். அதுவும் யாழ்.நீதிமன்றில் பிணை கோரப் போவதில்லை என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெப்போலியன் சார்பாக எம்.கே.சந்திரலால் இந்த மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தார். வழக்கில் ஊர்காவற்றுறை பொலீஸ் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் அரச சட்டத்தரணி நியாஸ் ஹம்ஸா ஆஜராகியிருந்தார்.

நெப்போலியன் கொலைக் குற்றவாளியாகக் கருதப்படும் இந்தச் சம்பவத்தில் - நெப்போலியன் உட்பட மூன்று பேர் கொலைக் குற்றவாளியாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

இவர்கள் அனைவருக்கும் யாழ். நீதிவான் நீதிமன்றப் பிடியாணை பிறப்பித்ததை அடுத்து, மூவரையும் கடந்த பொதுத் தேர்தல் தினத்துக்கு இரண்டு நாள்களுக்கு முன் யாழ். பொலீஸார் கைது செய்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவர்களில் மதனராஜாவும் நெப்போலியனும் அன்று மாலையே பிணையில் விடுவிககப்பட்டனர்.

பின்னர் இவர்கள் தலைமறைவாகிவிட்டனர். மதனராஜா ஈ.பி.டி.பியின் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் சரணடைந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஊடகவியலாளர் நிமலராஜன் கொலையிலும் இவருக்கு தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

நெப்போலியன் இன்னும் தலைமறைவாக உள்ளார். மூன்றாவது குற்றவாளி விளக்கமறியலில் உள்ளார். (ஐ)


ENGLISH
G.A.Q. PAPER CLASS
LECTURES BY:
Mr. M.A.HARI
ஆரம்பம் :
23.02.2003 ஞாயிறு மாலை 3 மணி
Sunday / Saturday } 3 p.m. - 4 p.m.
அனுமதிக்கு முந்துங்கள்
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (14693)


# புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டது.

இத்திட்டங்களை இனங்கண்டு அடுத்த மாத இறுதிக்குள் முழுமையான திட்டத்தை தயாரித்து ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிப்பதென இணக்கம் காணப்பட்டது.

வடக்கு - கிழக்கில் மேற் கொள்ள இருக்கும் சகல திட்டங்களையும் ஓர் அமைப்பினூடாக மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

உடனடி மனிதாபிமானப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க வசதியாக புனர்வாழ்வு நிதியத்தை இயக்கும் செயற்பாடுகளை துரிதமாக்குவது என்றும் முடிவுசெய்யப்பட்டது. (ஐ-3-9)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொள்ளப்பட்டது.

பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் ஆரம்பித்து வைத்து நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றினார். வாழைச்சேனையிலும், மூதூரிலும் முஸ்லிம்கள் கொல்லப்பட்டது குறித்து பாதுகாப்பு அமைச்சர் உரிய கவனம் செலுத்தவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றுகையில், அரசு முன்னெடுக்கும் சமாதானப் பேச்சுக்களை முறிப்பதற்கான ஒரு சதித்திட்டமே இப்பிரேரணை எனவும் இனவாதக் கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கு பலிக்கடாக்களாகமாட்டோம எனவும் சொன்னார். (ஐ-9)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சபைச் செயலாளர் வி.சோதிலிங்கம் சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்று புதைகுழியைப் பார்வையிட்டார்.

புதைகுழி தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று பொலீஸாரைக் கோரவிருப்பதாக திலக் கூறினார்.

1988 - 89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஐ-3-290)


மாபெரும் கருத்தரங்கு
A/L 2003 பரீட்சையை எதிர்கொள்ளும் வடமராட்சி மாணவர் நலன்கருதி பரீட்சை நோக்கிலான விசேட இரசாயனவியல் கருத்தரங்கு
BY:- அன்பழகன் (அன்பு)
ஆரம்பம்: 19.02.2003 Wed. 9.00 a.m.
SCIENCE ACADEMY
நெல்லியடி. (4709)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஜெயராம், ரம்யாகிருஷ்ணன் நடித்த
ஜீலீ கணபதி
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல், யாழ்ப்பாணம். (14704)

வாகன சாரதி உடனே தேவை
- கொழும்பில் வேலைசெய்யவேண்டும்.
- வாகனசாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவேண்டும்.
- மேலதிகமாக மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல்வேண்டும்.
- முன்அனுபவம் தேவை.

தேவையான சகல ஆவணங்களுடனும் நற்சாட்சிப்பத்திரங்களுடனும் நேரில் சமுகமளிக்கவும்.
நேர்முகப்பரீட்சை இன்று (19.02.2003) புதன்கிழமை மு.ப. 10.30 மணிமுதல் நடைபெறும்.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-26610)

வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றது!
சாந்தி சச்சிதானந்தத்தின்
வறுமையின் பிரபுக்கள்
அபிவிருத்திக் கட்டுரைகள் அடங்கிய 181 பக்க நூல். தொண்டர் நிறுவனங்களிலும் அரச திணைக்களங்களிலும் அபிவிருத்தித் திட்ட வேலைகளில் ஈடுபடுவோர் அவசியம் படிக்கவேண்டிய நூல். விலை ரூபா 100/- மட்டுமே!
கிடைக்குமிடம்:-
TRRO,
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 2222416 (14667)


## மரண அறிவித்தல்

### கந்தசாமி குகதாசன் - நயினாதீவு

*(ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி)*

நயினாதீவைச் சேர்ந்த கந்தசாமி குகதாசன் நேற்று (18.02.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் சின்னக்குட்டி - தங்கமுத்து ஆகியோரின் அன்பு மருகரும் பார்வதியின் அன்புக்கணவரும் பிரபாகரன் (கனடா), உமாரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருமாமணி, வெற்றிவேலுப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, வெற்றிசாந்த், வெற்றிசாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி, கனகசபாபதி, சௌந்தரம், பராசக்தி காலஞ்சென்றவர்களான காமாட்சி சுந்தரம், கனகாம்பிகை, மகாலிங்கம், இராசரெத்தினம், ஞானசுந்தரம் மற்றும் பரமலிங்கம் மகாதேவா, கமலாம்பிகை, லிலிதாம்பாள், நவரெத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கதிர்காமநாதன், சிதம்பரநாதன், தில்லைநாயகி, மீனாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் நாளை (20.02.2003) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5ஆம் வட்டாரம், நயினாதீவு.* (14713)

தகவல்: சா.வெற்றிவேலுப்பிள்ளை (மருகர்)


MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 21.02.2003 இற்கு முன்னர் நேரில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ரயிலில் மூண்ட தீயினால் 134 பேர் கருகி மாண்டனர்!

## தென்கொரியாவில் பரிதாபச் சம்பவம்

சியோல்,பெப்ரவரி19

**தென்கொரியாவில் நிலத்தடி ரயில் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 134இற்கும் மேற்பட்டவர்கள்கருகி மாண்டனர். மேலும் பலர் எரிகாயங்களுக்கும் உள்ளாகினர். 97 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டதல்ல; வேண்டும் என்றே ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

விபதது டாய்கு நகரில் நடந்தது. எரிந்த நிலையில் காணப்பட்ட டசின் கணக்கான கருகிய சடலங்கள் விபத்து நடந்த இடத்தில் பரவிக் காணப்பட்டதாக அங்குள்ள உள்ளூர் தொலைக்காட்சி ஒன்று தெரிவித்தது.

"ரயிலில் வந்தவர்கள் நாட்டின் பல பகுதிகளினையும் சேர்ந்தவர்கள். அவர்களின் சடலங்களை அடையாளம் காண்பது மிகக் கடினமான காரியமாக இருக்கும்" - என்றார் நகர மேயர் சு ஹே-நொங்.

விபத்து நடந்த பல மணி நேரங்களின் பின்னரும் அந்த இடத்தில் இருந்து கரும் புகை வான்நோக்கிச் சென்றுகொண்டிருந்தது என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அங்கு சூழ்ந்துள்ள புகைமண்டலத்தால் மீட்புப் பணிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

ரயிலில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் திடீரென சிறிய கொள்கலன் ஒன்றில் இருந்த எரியக்கூடிய திரவம் ஒன்றை தீ மூட்டியதாலேயே ரயில் தீப்பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட பயணிகள் தெரிவித்துள்ளனர்.

"அந்த மனிதர் சிகரெட் லைட்டரைப் பயன்படுத்தி அந்த எரியும் திரவத்தைத் தீ மூட்ட முயன்றார். சில பயணிகள் அவரது முயற்சியைத் தடுக்கப் பிரயத்தனம் செய்தனர். அதற்கிடையில் அவர் அந்த எரியும் பொருளுக்குத் தீ வைத்துவிட்டார். அது திடீரென வெடித்து எரிய ஆரம்பித்தது."

- இவ்வாறு தெரிவித்தார் சம்பவத்தை நேரில் அவதானித்த பயணியான கிம் பொங்-ஹக்.


இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்று என்று பொலீஸார் கூறினர். இது தொடர்பாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தீ முதலில் 6 பெட்டிகளைக் கொண்ட ரயிலிலேயே ஏற்பட்டது. அதிலிருந்து ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு ரயிலுக்கும் தொற்றிக்கொண்டது. இதனாலேயே உயிரிழப்புகள் அதிகரித்தன என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களால் உள்ளூர் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



தீயில் எரிந்து கருகிய ரயிலின் தோற்றத்தை படத்தில் காண்கிறீர்கள்.



நிலத்தடி ரயில் நிலையத்திலிருந்து (நடுவில்) புகைமண்டலம் மேற்கிளம்புவதையும் மீட்புப் பணியாளர்கள் தமது பணியைத் தொடங்க ஆயத்தமாவதையும் காணலாம்.

## பாகிஸ்தானில் கடும் மழை இதுவரை 24பேர் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,பெப். 19

பாகிஸ்தானில் கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் மழை பெய்து வருகின்றது. இதுவரை பெய்த மழையில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு கடற்கரைப் பகுதி, வடமாநிலப் பகுதி ஆகிய இடங்களில் பருவ மழை தீவிரமடைந்துள்ளது. வடமேற்கு, வடகிழக்கு எல்லைப் பகுதிகள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன.

கடந்த ஞாயிறு முதல் செவ்வாய் வரை இஸ்லாமாபாத் நகரில் மட்டும் மொத்தம் 14.6 சென்ரிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. வடகிழக்குப் பகுதியில் முர்ரே மலைப் பகுதியில் 17 சென்ரிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

ஆப்கான் எல்லையை ஒட்டிய பஜௌர் நகரில் கடும் மழையால் வீட்டின் கூரை இடிந்து மூன்று பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். தெற்கு பாகிஸ்தானில் மழை காரணமாக மண் குடிசை ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 10 வயதுச் சிறுவன் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

மழை இன்னும் ஓரிரு தினங்கள் நீடிக்கும் என்று வானிலை நிலையம் அறிவித்துள்ளது. இதனால், உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

### தூதர்களை நியமிக்க இந்தியா - பாக். இணக்கம்

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் மீண்டும் தூதர்களை நியமித்துக்கொள்வதற்கு முடிவு செய்துள்ளன.

இந்தியாவுக்கான பாகிஸ்தான் துணைத் தூதர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவினார் என்று குற்றஞ்சாட்டி அவரை வெளியேற்றியது இந்தியா. அதற்குப் பதிலடியாக பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரை அந்த நாடு வெளியேற்றியது.

தற்போது புதிய துணைத் தூதர்களை நியமிப்பதற்கு இரு நாடுகளுமே முடிவுசெய்துள்ளன. இந்திய துணைத் தூதராக டி.சி.ஏ.ராகவன் நியமிக்கப்பட இருக்கிறார். பாகிஸ்தான் துணைத் தூதராக சயீத் பட்டி நியமிக்கப்படவிருக்கின்றார்.

## கடும் பனிமழையில் சிக்கி அமெரிக்காவில் 5 பேர் பலி!

வாஷிங்ரன்,பெப்.19

அமெரிக்காவில் கடந்த சில தினங்களாக பனிப்புயல் வீசி வருகின்றது. மணித்தியாலத்துக்கு 10 சென்ரிமீற்றர் பனி மழை பெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை பனிமழை காரணமாக ஐவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றுடன் மோசமான பனிமழை பெய்வதால் பல இடங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை வீசிய பனி மழைகளிலேயே மோசமான மழை இது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வீதிகள் பனிக்கட்டிகளால் மூடப்பட்டுள்ளன. விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. வாஷிங்ரனில் அனைத்து விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டன. விமான நிலையங்களுக்குச் சென்றவர்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் விமான நிலையங்களைவிட்டு வெளியேற முடியவில்லை.

அதிபர் புஷ் விடுமுறையைக் கழிப்பதற்காக காம்ப்டேவிட் சென்றிருந்தார். பனிமழையால் தன் திட்டத்தைக் கைவிட்டு காரில் வெள்ளை மாளிகை திரும்பினார் அவர். பனி மழை காரணமாக ஹெலியில் பயணம் செய்யமுடியவில்லை. அதனாலேயே அவர் காரில் திரும்பினார்.(ம)



பனியால் மூடப்பட்ட வீதியில் காரைத் தள்ளிச் செல்லும் அமெரிக்கர்கள்

## ஈராக்கைத் தாக்குவதில் அமெரிக்கா பிடிவாதம்

வாஷிங்ரன்,பெப்.19

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கக்கூடாது என்று உலகெங்கும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளபோதும், அதனையெல்லாம் பொருட்படுத்தாமல் ஈராக் மீது தாக்குதல் நடத்துவதில் அதிபர் புஷ் பிடிவாதமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு எதிராக உலக நாடுகள் பலவற்றிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெறுகின்றன. ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் ஈராக்கைத் தாக்குவதற்கு பெருமளவில் ஆதரவு இல்லை.

ஆனால், ஈராக்கைத் தாக்கும் திட்டத்தில் இருந்து அமெரிக்கா பின்வாங்காது என்று தெரிகின்றது. அதிபர் சதாம் பதவியில் இருந்து விலகவில்லையெனில் அவரை பதவி கவிழ்க்கவும் அதிபர் புஷ் திட்டமிட்டுள்ளார். இதுகுறித்து சி.என்.என். செய்தி நிறுவனம் தெரிவித்ததாவது.

பேரழிவு தரும் ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது என்னும் ஐ.நா. பாதுகாப்புச் சபை பிரேரணையை சதாம் மீறிவிட்டார். அவரிடம் இருக்கும் பேரழிவு தரும் ஆயுதங்களை ஒழிப்பதற்கு அவருக்கு இரு வார கால அவகாசம் வழங்கப்படுகின்றது என்று கூறும் புதிய பிரேரணை ஒன்றை பாதுகாப்புச் சபையில் கொண்டுவர அமெரிக்காவும் பிரிட்டனும் திட்டமிட்டுள்ளன.

அதன் பின்னர் - இரு வாரங்கள் கழித்து - அரபு நாடுகளில் குவித்து வைத்துள்ள தன் படைகளையும் துருக்கியில் உள்ள தன் படைகளையும் கொண்டு ஈராக்கைத் தாக்குவது அவற்றின் திட்டம்.

- இவ்வாறு சி.என்.என். கூறியுள்ளது.

அதேசமயம் - போருக்கு எதிரான கருத்து அமெரிக்க மக்களிடையேயும் வளர்ந்து வருகின்றது.

(ம)



குவைத்தில் அமெரிக்கப் படையினர் பயிற்சி

## புனிதப் போரை ஆரம்பியுங்கள் தலிபான் தலைவர் அழைப்பு

இஸ்லாமாபாத்,பெப்.19

அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானில் தற்போது பதவியில் இருக்கும் அரசுக்கும் எதிராகப் புனிதப் போர் நடத்தும்படி தலிபான் தலைவர் முல்லா ஒமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஒமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். 2001இல் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து தப்பி ஓடிய ஒமர் இப்போதுதான் வெளிப்படையான அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். பாகிஸ்தானில் இருந்து வெளியாகி வரும் பத்திரிகைகளுக்கே அந்த அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நேரடியாகப் புனிதப் போரில் ஈடுபட முடியாத ஆப்கானிஸ்தானியர்கள் ஹமீட் ஹர்சேயின் அரசிடம் இருந்தும் அமெரிக்காவிடம் இருந்தும் ஒதுங்கி இருக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இல்லையேல் அவர்கள் அமெரிக்காவின் நண்பர்களாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

TVS Suzuki Ax100 மோட்டார் சைக்கிள் ஒன்று நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. S.V. குணபாலன், 239, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (Dr.பிலிப் வார்ட்டுக்கு முன்னால்). (14646)

10முழம் நீளமும் 8முழம் அகலமும் கொண்ட கொட்டகையும் மரங்களை நிறையிடும் தராசும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசா டீசல் எஞ்சிஜினியர்ஸ் அருகில் உள்ள மரக்காலையில், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (14666)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13977)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 20-02-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14391)

## தவறிவிட்டது

தே.அ.அ.இல. 583121625V, சாரதி லைசன்ஸ் ஆகியன யாழ்ப்பாண மாவட்டத்தில் போக்குவரத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: A.H.M. காதர் Vakkunuwala, Horombawa, Kurunagala. T.P. No. 037 86414, 86401. (14662)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வாசுகி அருளானந்தம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 756301276V) யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'சுந்தர பவனம்', அராலி தெற்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (14676)

## தேவை

கொழும்பில் உள்ள சிறிய தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற Auto Cad படவரைஞர் தேவை. தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும். தொடர்புகொள்ளவும் 01-809567. (சி-26595)

## வெளிவந்து விட்டது

2003/04 உயர்தர மாணவர்களுக்கான பொது ஆங்கிலம் (பகுதி I, II) மாதிரி வினாத்தாள் யாழ்.நகரின் பிரபல புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு. ஒன்றின் விலை ரூபா 20/- மட்டும். ஆசிரியர்: சு.மகேஸ்வரன் ஆங்கில ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி. (14659)

## ஆசிரியர்களுக்கு கணனிப்பயிற்சி

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களில் இருவருக்கு முதலாம் தவணை விடுமுறை நாள்களில் கணனிப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதேவேளை-வலயக் கல்வி அலுவலகங்களில சேவையாற்றும் நிர்வாக அணியினர் மற்றும் பொதுச் சேவையினர்களுக்கு ஐந்து நாள்கள் கொண்ட மூன்று செயலமர்வுகளில் கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.(ஓ-51)

## கொழும்புத்துறையில் இரவு நேர வகுப்புகள்

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயததில் இரவு நேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகள் இடம்பெயர்வின் பின்னர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஓ-30)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



தரணியில் தாரகையாய் 07 - 04 - 1944

காலனின் கைப்பிடியில் 20 - 03 - 2002

## அமரர் கதிர்காமு செகராசா

(ஓய்வுபெற்ற இ.போ.ச.நடத்துநர்)

திதி: 20-02-2003

*அன்பாய் அரவணைத்து*
*அகல் தீபமாய் நின்று*
*எம் குடும்பம் காத்த குலபதியே!*
*இன்று நீ எமைப் பிரிந்து*
*ஓராண்டாகியது - ஆனாலும்*
*உம் நினைவு ஓயாது ஒலிக்குதையா!*

- குடும்பத்தினர்

(14674)

நிரந்தர முகவரி:
*வசாவிளான் மேற்கு,*
*வசாவிளான்.*

தற்காலிக முகவரி:
*பழம்வீதி, ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*


# நீங்களும் கற்கலாம் ஸ்கிறீன் பிரிண்டிங்
# சுயதொழில் - கைத்தொழில் 3 நாள் பயிற்சி

இயந்திரம் இல்லாமல் உடல் உழைப்பையும் சிறிய முதலீட்டையும் மூலதனமாக வைத்து சிறிய இடத்தில் பனர், T.சேட், திருமண அழைப்பிதழ், CD, பேனா, தகரம், மரம், போஸ்டர், வாழ்த்து அட்டைகள் முதலியனவற்றில் பிரிண்டிங் செய்யலாம்.

கைவழிமுறையால் செய்யும் இத்தொழிலை முறைப்படி கற்றுக்கொண்டால் உலகில்



எந்த இடத்திலும் தனியாக தொழில் செய்யலாம். கைவழிமுறை பிரிண்டிங், காண்போரைக் கவர்ந்திழுப்பது மட்டுமன்றி, நேர்த்தியாகவும், விரும்பிச் செய்யும் மனோபக்குவமும் நம்மிடம் இருக்கும். இத்தொழிலைக் கற்றால் பகுதிநேரமாகவும், முழுநேரமாகவும் தொழில் செய்யலாம். இத்தொழிலில் நிபுணத்துவமும் 18 வருட அனுபவமும் மிக்க தென் தமிழ் மாவட்டத்தைச்



சேர்ந்த R.பரதன் அவர்கள் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளார். பயிற்சிபெறவிரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் நேரில் தொடர்புகொண்டு பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்.

# CAREER.COM INSTITUTE

## 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- கடைசி வகுப்புகள் இம்மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகின்றோம். யாழ்ப்பாணத்தில் முன்னரே பயிற்சிபெற்ற பழைய மாணவர்கள் தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், தொழில் பற்றிய சந்தேகங்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்கிறீன் பிரிண்டிங் பற்றிய புதிய நூலையும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்கிறீன் பிரிண்டிங் பொருள்கள் Clip Arts CD(1000 படங்கள் அடங்கியது)

## ராஜா ஸ்கிறீன் பிரிண்டிங்

*18/5, மார்டீன் வீதி, யாழ்ப்பாணம்*

எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

*(T.P.No: 0777 108423, 0777 036597)*

(14675)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இடைக்குறிச்சி J/341

கிராம உத்தியோகத்தர்

## திரு.ந.இராசகுமாரன்

அவர்கள் தரம் 1 இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டி அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெறுவதுடன் இவரது சேவை எமது பகுதிக்கு தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமென உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

நவா சனசமூக நிலையம்,
இளைஞர் விளையாட்டுக் கழகம்.

*இடைக்குறிச்சி,*
*வரணி.* (14678)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கைதடி வடக்கு கிராம அலுவலரான

*திரு.சிவபாதம் இரவீந்திரன* அவர்களின் அன்புத் தந்தையாரான

## அமரர் கைலாயபிள்ளை சிவபாதம்

*(ஓய்வுபெற்ற லிகிதர், சுகாதாரப் பணிமனை)*

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- ஊழியர் நலன்புரிச் சங்கம்.

தென்மராட்சி பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

(சி-26603)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## அமரர் விஸ்வலிங்கம் தியாகராஜா

*அமரத்துவம்: 20.01.2003*

கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் எல்லோராலும் "குஞ்சியப்பு" என செல்லமாக அழைக்கப்பட்டவர். அன்னார் காலஞ்சென்ற திருமதி நாகேஸ்வரி இரத்தினசபாபதி (சிவலிங்கப்புலியடி, வண்ணார்பண்ணை), கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கை திருமதி மகேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டி 18.02.2003 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கொழும்பு முகத்துவாரத்திலுள்ள அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெற்றது. 31ஆம் நாள் அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (20.02.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை தம்பையா சத்திரத்திலுள்ள சித்திவிநாயகர் மண்டபத்திலும் கைதடி வயோதிபர் இல்லத்திலும் இடம்பெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கொக்குவில்.* (14669) - அன்பர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்

## திருமதி க.பேரின்பநாயகி

அவர்களின் அன்புத் தந்தையார்

## அருணாசலம் வேலுப்பிள்ளை

அவர்கள் இயற்கையெய்திய செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.
மருதங்கேணி, தாளையடி.

(14677)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 01 - 05 - 1923

விண்ணில் 20 - 01 - 2003

## அமரர் தம்பிமுத்து நாராயணசாமி

பாசத்தின் சிகரமே!
அன்பின் உறைவிடமே!
அந்தரிக்க ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அப்பா என
அழைக்க நீங்கள் இல்லையே!

(சி-26594)

இன்று (19.02.2003) புதன்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நா.தர்மராசா குடும்பத்தினர்
உரிமையாளர் சுகுணலக்ஷ்மி ஆடையகம்,
பருத்தித்துறை

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

# மணமகள் தேவை

ஜேர்மனியில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய, செவ்வாய் பாவம் - 8 உள்ள மணமகனுக்கு ஜேர்மனி, சுவிஸ், லண்டன், நோர்வே, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளில் ஒன்றில் வசிக்கும் பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: 070 212226

ஸ்ரீதர்
மொடேன் ஸ்ரோர்ஸ்,
நெல்லியடி.

(14682)


# மனையறம் சிறக்கவந்த அம்மை செல்லம்மா

கார்காத்த வேளாண் வினைஞர்கள் விரவி வாழ்ந்த விளைநிலம் இணுவையம்பதி. வேதநெறி தழைத்தோங்கி மிகு சைவத்துறை விளங்கிய புனித பூமியும் இதுவே. ஈழத்துத் திருவாரூர் என இயம்பப்படும் இசை மலிந்த மண் இணுவையூர். இத்திருவிடத்தே நாராயணரின் நற்றவப் பேறாய் நீடுலகில் வந்துதித்தார் இராமுப்பிள்ளை எனும் நடுநிலையாளன். நீதியின்பால் நெஞ்சிருத்திய நீர்மையன். அப்புனிதனின் கைத்தலம் பற்றிய பெண்ணணங்கு பத்தினிப்பிள்ளையாவார். இவர்களின் இல்லறச்சிறப்பால் மனையறம் மங்கலச்சிறப்படைய வந்த மகாலக்குமியனைய செல்லம்மா சீர் பெருகுசிரேஷ்ட புதல்வியாவார்.

கேடில் விழுச் செல்வம் கைவரப்பெற்ற கற்றவர் காமுறும் சகோதரர்கள் நால்வர் அன்னாரின் சகோதரர்களாவார்கள். முறையே அதிபர் இராசலிங்கம், பண்டிதர், சைவப்புதல்வர், வித்துவான் பட்டங்களைத் தனதாக்கிய அதிபர் திருநாவுக்கரசு, தபாலதிபர் இராசரத்தினம், வடமாநிலக் கல்விப்பணிப்பாளரான சுந்தரலிங்கம் ஆகியோராவர்.

வளரும் பயிர் முளையிலே செழுமை கண்டது. மூன்று வயதில ஞானசம்பந்தன் பாடியது வரலாறு. ஐந்து வயதிலே கவிதை பாடிய கலியுகக் குழந்தை செல்லம்மா.

நல்லற நங்கை செல்லம்மா செகராஜசேகரப்பிள்ளையார் மணியோசைக்குப்பின் உலையேற்றி உறுபசிபோக்கிய உத்தமி. பயக்குறையில்லாப் பாலகர் எழுவரையும் நங்கையர் இருவரையும் சிறார்களாகப் பெற்ற சீரினள்.

சின்னப்பு தம்பிஐயாவும் செல்லம்மாவும் கண்ட இல்லறப் பேறாய், இறையருள் பொங்க மக்கள் அறுவர் அரசசேவை பெற்று வாழ்வியில் நடத்தினர். உழுதுண்டு வாழாமை பழுதென எண்ணிய பாலகன் ஒருவன் அப்பணி கண்டு பொருளீட்டலானார். பெண்கள் இருவரும் தபாலதிபர், சிறையுயர் அதிகாரியென தக்கோரின் கைத்தலம் பற்றி களிப்புற்றனர். இவை "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவன் கூற்றிற்கு தக்க சான்றாகுமன்றோ?

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் நிமலன் தாள் நினைத்த அம்மை, இறைவனை மறந்த நேரம் இறந்த நேரத்திற்குச் சமனென தீர்க்கமாய் எண்ணினர்போலும். சைவ பாரம்பரியத்தில் சான்றாண்மை கெழுமிய சகோதரச் சூழலில், அறம் தழைத்த மண்ணில் வாழ்ந்த பெருமையால் சீவன் சிவனாகின்றபோது "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" என உதடவை உச்சரித்து உள்ளம் நெகிழ்ந்தார். இறப்பில் மறுமைப் பேற்றைப் பெற வழிசமைத்தோர் போலும்.

"செல்வானந்தவாசா"
இணுவில் மேற்கு.

பாசமிகு இளைய சகோதரன்:-
இரா சுந்தரலிங்கம்
(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

(C/25598)

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.19

நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் 'அருணகிரியாரின் அருள்வாக்கு' என்னும் விடயத் தலைப்பில் இராமநாதன் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30மணிக்கு நடைபெறும்.

# புனர்வாழ்வு அமைச்சின் உப அலுவலகம் விரைவில் நகரில்

யாழ்ப்பாணம்,பெப்.19

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் உப - அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது.

குடாநாட்டில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வசதியாக இந்த உப-அலுவலகம் திறக்கப்படுவதாகவும்-

யாழ்.செயலகத்துடன் இணைந்து இந்த உப - அலுவலகம் செயற்படவிருப்பதாகவும் - புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்தார்.

(ஒ-8)

# கசிப்பு வழக்கில் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 4 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 92 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்.கொட்டடியைச் சேர்ந்த ஞா.ஹென்றி என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நாவாந்துறையைச் சேர்ந்த வேசததிய சீலன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

யாழ்.மடம் வீதியைச் சேர்ந்த தெ.சுசீலாதேவி என்பவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நாவாந்துறையைச் சேர்ந்த செ.தவலோகராஜா என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் - அபராதமாக விதிக்கப்பட்டது. (ஒ-8)


## வான் விற்பனைக்குண்டு

43 தொடர் இல XXXX
கொண்ட HIACE LH 30
வான்
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
T.P. No.0777-570380

(14684)



# உங்கள் வீட்டு ஜெனரேட்டர்கள்

## 2.4 Kva முதல் 7.0 Kva வரை

மின் உற்பத்தித் துறையில் முன்னோடிகளான
**ஸ்ரெ:பில் (STEPHILL)**
வர்த்தகச் சின்னம் தாங்கிய பரவலான
தரமிக்க தயாரிப்புகள்

* எரிபொருள் விரயமற்றது. ஹொண்டா GX பெற்றோல் இயந்திரம் - சிக்கனமான பாவனைக்கு உகந்தது.
* மின் நிர்ணய பொத்தான் / சக்தி மீறலைத் தவிர்க்கும் MCB பாதுகாப்பு
* எண்ணெய் மட்ட அவதானிப்பு, மின்சுருள் இயக்கி, சட்டத்தைச் சுற்றிக் கவசம் கனரக உருக்கு கட்டுப்பாட்டு பெட்டகம்.
* குறைவான இரைச்சல் 7 மீட்டர்களில் 73 dBA வீட்டின் உட்புறச் சூழல் தேவையற்ற சத்தத்தினால் மாசுபடாது
* பாதுகாப்பானது, நம்பிக்கையானது - பிரிட்டிஷ், ஐரோப்பிய தராதரங்களுக்கு அமைவாக இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது.

12 மாத உத்தரவாதம்

CSSC

The Ceylon Service & Supplies Co. Ltd.
110, Dehiwela Road, Maharagama, SriLanka.
Tel: 94-1-746100, 94-(0)-75-554672/73 Fax: 941.851.915
e-mail: sersupce@mega.lk


# வீதி விபத்தில் இரு பெண்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.19

உரும்பிராய் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மினிபஸ் - மோட்டார் சைக்கிள் நேரெதிரே மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-8-15)

## யா/இராமநாதன் கல்லூரி
## வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி - 2003

| | |
|---|---|
| காலம் | :- இன்று (19.02.2003) புதன்கிழமை பி.ப.1.30 மணி. |
| தலைவர் | :- திருமதி ஆ.சிவஞானசுந்தரம் (அதிபர்) |
| பிரதமவிருந்தினர் | :- திரு.க.சிவாஜிலிங்கம் (நாடாளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்) |
| கௌரவவிருந்தினர் | :- திரு.சு.சுந்தரசிவம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் வலயம்) |
| சிறப்பு விருந்தினர் | :- திரு.ரி.இலக்கியன் (மாணவர் பேரவை - தமிழீழம்) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்).

சுன்னாகம்.

(14681)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
09 - 05 - 1924



மறைவு
20 - 01 - 2003

## திருமதி சங்கரன் சின்னாச்சி

*எங்கள் அன்புத் தெய்வமே! ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (19.02.2003) புதன்கிழமை நடைபெறுகின்றது. அந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(14670)

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சிவஞானசுந்தரம்

*(ஓய்வுபெற்ற வேலை மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)*

தும்பளை மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த தம்பிராசா சிவஞானசுந்தரம் அவர்கள் 17.02.2003 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - சிவபாக்கியத்தின் ஏகபுத்திரனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் வாசன் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), நவீனி (சுவிஸ்), வதனி, ஞானேஸ்வரன் (லண்டன்), சுபாசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகை (ஜேர்மனி), சமந்திரன் (ஜேர்மனி), சிவனேசன் (சுவிஸ்), பிறேமகோனேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் பிரியங்கா, மேனகா, திருமாறன், தாரணி, காயத்திரி, ஆதித்தன், அட்சயன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தும்பளை மேற்கு,*
*பருத்தித்துறை.*

(சீ-26600)

தகவல்:
நாகேஸ்வரி (மனைவி)

## திருமதி இராசையா சொர்ணம்மா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா சொர்ணம்மா சனிக்கிழமை (15.02.2003) நீர்கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் குப்பிளான் சின்னத்தம்பி - பறுவதத்தின் அன்பு மகளும் குப்பிளான் கந்தையா - சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பென்சனியர் கந்தையா இராசையாவின் பாசமிகு மனைவியும் ஓய்வுபெற்ற ஆசிரியர் சொக்கலிங்கம், காலஞ்சென்ற - ஓய்வுபெற்ற ஆசிரியை பத்மாவதியம்மா, ஞானலிங்கம் (டென்மார்க்), அருள்ராசலிங்கம் (தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு அக்காவும் சிங்கராசா (ஓய்வுபெற்ற சாரதி, C.T.B.), அன்னலட்சுமி, மல்லிகாதேவி (மணி), காலஞ்சென்ற ரேவதிதேவி(கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வானமலர் (கனடா), திருமலர் (இராணி - கனடா), தங்கராசா (கனடா), சிவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வி. சச்சிதானந்தம் (கோபால் - கனடா), செ. சுந்தரலிங்கம் (கனடா), காந்திமதி (மதி - கனடா), கலைச்செல்வி (வவி - கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிர்மலா, காஞ்சனா, மயூரன், மயூரதன், சர்மிளா, மதிசருபி, அரவிந்தன், கோபிநாத், கிருஷ்ணரேசா, சுபேசா, சாருகா, கார்த்திகா, சோபிகா, சாரங்கன் ஆகியோரின் பேர்த்தியாரும் வாசினி, புவிராஜ், ஆரதி, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2003) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரின் குப்பிளான் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திக்கு அருகில்,
குப்பிளான், ஏழாலை.
T.P.No. 905 471 9976
416 754 0661

தகவல்:
இ. தங்கராசா (மகன்),
இ. சிவராசா (மகன்),
வி. சச்சிதானந்தம் (மருமகன்),
செ. சுந்தரலிங்கம் (மருமகன்).

(14679)

# தமிழர் நலனுக்காக தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து அரசியல் வியாபாரிகளை அகற்றி ஆகவேண்டும்!

## கருத்தரங்கில் ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஆவேசப் பேச்சு

கொழும்பு,பெப்.19

தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள எம்.பிக்கள் பலர் தமிழ்மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இல்லை. தமிழினத்தின் நலனுக்காகக் கூட்டமைப்பிலிருந்து அரசியல் வியாபாரிகளை அகற்றியே ஆகவேண்டும். இப்படி ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஆவேசமாகக் கூறினார்.

'தமிழ்த் தேசிய இனமும் இன்றைய அரசியல் பரிமாணங்களும்' என்ற பொருளில் கொழும்பு கொள்ளுப்பிட்டி மக்னட் மண்டபத்தில் தமிழர் பணிக்குழுவின் உபதலைவர் க.அருணாசலம் தலைமையில் நடந்த கருத்தரங்கில் ஸ்ரீகாந்தா உரையாற்றினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

தமிழ்மக்களின் வாழ்க்கை நிலையில் ஒருவிதமான தேக்க நிலையே உருவாகியுள்ளது.

பெண் புலிகளின் இடுப்புப் பட்டியில் கைவைக்கும் அளவிற்கு சிங்கள இராணுவம் அத்துமீறி செயற்பட்டுள்ளது கவலைக்குரியதாகும். சமாதான முன்னெடுப்புகளுக்கு இது ஊறுவிளைவிப்பதாகும். யுத்தநிறுத்தச் சூழலை உடைத்து, நெருக்கி செயற்படுவதற்கு ஜனாதிபதியின் ஆட்சி தயாராகிறதா என்ற சந்தேகம் உருவாகிறது.

சமாதானப் பேச்சுகளுக்கு எந்த அளவில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி பொறுப்புள்ள அரச தலைவர்கள் - குறிப்பாக ஜனாதிபதியும் அவரது சகோதரரும் - புரிந்து கொண்டு செயற்படுவதாக இல்லை.

இது சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு தடைக்கல்லாகும்.

விடுதலைப் புலிகள்மீது வீண் பழிகளை சுமத்துவதற்கு சில சிங்கள பத்திரிகைகள் முனைகின்றன. இந்தியாவை சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக அமைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவின் உதவியின்றி சமாதான முயற்சிகளில் வெற்றியடைவது கடினமாகும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒழுங்காகச் செயற்படவேண்டும். இல்லையெனில், அதிலிருந்து வெளியேறுவதற்கு ரெலோ தயங்காது. கூட்டமைப்பில் உள்ள பல எம்.பிக்கள் தமிழ்மக்களின் நலன்களில் அக்கறை கொண்டவர்களாக இல்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை அடக்கம் செய்யவேண்டுமென அதிலுள்ள பல எம்.பிகள் எண்ணுகிறார்கள் என்று கருதவேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பிலிருந்து அரசியல் வியாபாரிகளைத் தயவு தாட்சண்யமின்றி அகற்றவேண்டும். வயோதிபர் மடமாக நாடாளுமன்றத்தினை எவரும் கருதிவிடக்கூடாது.

தமிழ்மக்களுடைய உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தின் உள்ளும், புறமும் உண்மையாக போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவது அவசியம். அப்பொழுதுதான் தமிழ் மக்களின் உரிமைகள் பேணிப்பாதுகாக்கப்படும். - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### குமரகுருபரன்

இக்கருத்தரங்கில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உபதலைவர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தத்தைச் சந்திக்க விரும்பவில்லை. அதனை இந்த நாட்டின் பிரதமரோ ஜனாதிபதியோ கூட விரும்பவும் மாட்டார்கள்.

இலங்கையில் முழு சமாதானம் ஏற்பட்டதன் பின்னரே உலக நாடுகள் முழு அளவிலான நிதி உதவிகளை வழங்கப்போவதாகக் கூறியுள்ளன.

இதனை அரசு அலட்சியம் செய்துவிட முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக கூட்டணி எம்.பிக்கள் சிலர் அரசியல் 'ஸடண்டு'களில் ஈடுபடுவது கவலைக குரியதாகும்.

நாடாளுமன்றத்தில் இருப்பவர்களில் சிலர் தமிழ் மக்களின் உரிமைகளையிட்டு அக்கறை காட்டுபவர்களாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை பெரிதும் நம்பியிருக்கிறார்கள். விடிவைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

இக்கருத்தரங்கில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது:-

சமாதான முன்னெடுப்புக்களால் தமிழ் மக்கள் சில நன்மைகளைப பெற்றுள்ளனர். இது யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒருவருட காலத்திற்குள் நிகழ்ந்தவையாகும்.

பேச்சுகள் சுமுகமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்ற நம்பிக்கையை நாம் உறுதி செய்துகொள்ளவேண்டும்.

பேச்சுகளை குழப்பும் விதத்தில் சிலர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இதற்கு இடமளிக்கக் கூடாது.

நாம் சமஷ்டி ஆட்சி முறையினை வரவேற்கின்றோம். இது பேச்சுக்களின் போது அரசுக்கும் உலகநாடுகளுக்கும் புலிகளால் உணர்த்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் மக்களின் நலன்கருதி யுத்தத்தை விரும்பமாட்டார்கள்.

பொதுத் தேர்தலின் முடிவுகளைப் பொறுத்தே அவர்கள் முக்கியமான அரசியல் தீர்மானங்களை எடுப்பர்.

நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின உதவி கட்டாயமாகத் தேவைப்படுகிறது. 110கோடி மக்கள் வாழும் அண்டை நாடு இந்தியா. அந்த நாட்டை புறந்தள்ளி செயற்படமுடியாது.

தேர்தலுக்காக உருவாக்கப்பட்டது அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை அனைவரும் குறிப்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உணரவேண்டும்.

அவர்கள் தமது இன்றைய நிலையிலிருந்து மீண்டு சமாதான முன்னெடுப்புகளுக்கு முறையான பங்களிப்பினை நல்கவேண்டும்.

சிங்கள இனவாதிகள் பேச்சுகளை குழப்ப எண்ணலாம். எனினும், பேச்சுகளில் நாம் நம்பிக்கை கொண்டு அதனை ஊக்குவிக்கும் விதத்தில் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

- இவ்வாறு அவர்தெரிவித்தார்.

### மனோ கணேசன்

கருத்தரங்கில் பேசுகையில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் உதவிகளை நாம் நிராகரித்துவிடமுடியாது. எமது பண்பாடு, கலாசாரத் தொடர்புகள் எல்லாம் இந்தியாவுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாயிலாக நாடாளுமன்றம் செல்ல வேண்டியவர்கள் சிலர் அங்கு செல்ல முடியாமற்போனது கவலைக்குரியதாகும்.

தமிழ் மக்களது உரிமைகளைப் பெறும் விடயத்தில் நாம் பிளவுபட்டு செயற்படக்கூடாது. ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென்றேன். எனினும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல கொடுக்கிறேன். விடுதலைப் புலிகளின் சார்பாக நாடாளுமன்றத்தில் பேசுகிறேன்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பில இணைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முறையாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு இங்கு எழுப்பப்பட்டது.

மலையகத் தலைவர்கள் சிலர் பொறுப்புடன் நடந்து கொள்ளாததாலேயே நாடற்றவர் பிரச்சினை உருவாகியது. மலையகத் தலைவர்கள் போல தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நடக்கக்கூடாது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அவர்கள் முனைப்பாகச் செயற்படவேண்டும் - என்றார் அவர். (ஓ)

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை,பெப்.19

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.45மணிக்கு அதிபர் சசைலசநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசாவும் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொள்வர். (ஏ-29)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.19

வலி.வடக்கு பிரதேச செயலகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. எதிர் தெல்லிப்பழை எஸ்.எம்.எஸ் வி.க., வசாவிளான் விண்மீன் வி.க. எதிர் தெல்லிப்பழை நாமகள் வி.க. (ஏ-86)

★ ★ ★

கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு 'கறுப்பு வெள்ளை' மைதானத்தில் பாடசாலை அதிபர் சுசிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆவ. கணேசலிங்கம் கலந்துகொள்கிறார். (ஏ-16)


## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 28 - 06 - 1976

தாயக மண்ணில் 19 - 02 - 2001

### கப்டன் யாழ்வேந்தன்

**இராசரத்தினம் பிரசன்னவதனன் (வதன்)**

**திதி: 27-02-2003**

அழுது துடிக்கின்றோம் எமையாற்ற - நீ இல்லை மகனே!
தேடித் திரிகின்றேன் - தம்பி
உங்களை நாம் காண்பதெப்போ - அண்ணா?
உன் உருவம் காணத்துடிக்கின்றேன் - மாமா!
சீராக உன்னுடன் வாழ்ந்திட - நாம்
கொடுத்து வைக்கவில்லை!
ஒட்டி இருந்தோம் நான்கு பேர் - இன்று
நீ மட்டும் உதிர்ந்துவிட்டாய்!
கூடிப்பாடித் திரிந்தோம் - இன்று
நீ மட்டும் தூரத்தில் சென்றுவிட்டாய்!
இறுதிப் பயணத்தில் எங்கள் ஒருவரையும்
பார்க்காமல் சென்றுவிட்டாய்!
ஈராண்டுகள் கழிந்ததோ நீ எம்மை
விட்டுப் பிரிந்து - இன்னும்
ஈரவிழிகள் காயவில்லை.........வதனா...........!

*என்றும் உங்கள் பிரிவைத் தாங்கமுடியாத உள்ளங்கள்.*

*காளி கோயிலடி, தாவடி வடக்கு, கொக்குவில்.*

அப்பா, அம்மா, தம்பிமார், அக்கா, அத்தான், மருமகன் மற்றும் உறவினர்கள். (14387)



## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல காப்புறுதி நிறுவனத்திற்கு பிரதேச பிரதிநிதிகள் (Agent) தேவை.

கீழ்க்காணும் முகவரிக்கு 22. 02. 2003 ஆம் திகதிக்கு முன் உங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 1788
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு- 23 வயதிற்கு மேற்பட்ட காப்புறுதி பற்றித் தெரிந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். (14668)



# JAFFNA COLLEGE
## PRIMARY SCHOOL

Cordially invites you to its

**ANNUAL INTER - HOUSE ATHLETIC MEET**

to be held on

**FRIDAY 21st FEBRUARY 2003 at 2.00 p.m.**

on the Bicknell grounds

under the distinguished patronage of

**Mr.A. RATNASABAPATHY**

&

**Mrs.JEEVA RATNASABAPATHY**

*(Retired Jubilarian, Jaffna College)*

(C/256.05) **- Principal, Supervisor & Staff.**



## கடை வாடகைக்கு

பருத்தித்துறையில் சிவன் கோவில் வடக்கு பக்கம், பருத்தித்துறை தும்பளை வீதியில் மயில்வாகனம் வாசிகசாலைக்கு அண்மையில் பாதுகாப்பான இடத்தில் 45 அடி அகலமும் 65 அடி நீளமும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- ச.காந்திதாசன்,
சிவன் அச்சகம்,
பருத்தித்துறை.



## அமரத்துவம் அடைந்த தந்தைக்கு அகத்தகலாத 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 28 - 01 - 1913



விண்ணில் 09 - 02 - 1993

**அமரர் மாணிக்கம் சின்னத்துரை (தலைவர்)**

*(பாரதி வீதி, அச்சுவேலி)*

திதி 16.02.2003

இந்துமா கடலில் மிதக்கும் ஈழம்
கண்ணீர்துளிவடிவில் என்றும் இருப்பது போல்
எம் இதயம் நிறைந்த தந்தையின் நினைவால்
கண்ணீர் பனிப்ப காலமெல்லாம் நாமிருப்போம்!
பத்தாண்டு காலம் மெத்த நகர்ந்தாலும்
சித்தம் தடுமாறும் சிந்தனைகள் நகராதே!

*ஆர்க் லேன், உடுவில்.*

(1783)

துணைவி, மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.